# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - MAY 2026
VOL. 24 ISSUE 2 - 28 PAGES - Rs. 21/-

மே 2026



## கர்த்தர் சீயோனைக் கட்டி தமது மகிமையில் வெளிப்படுவார்

(சங்கீதம் 102:15)

# சாங்லியில் தேவன் தடையின்றி அசைவாடினார்













**மகாராஷ்டிரா பிரார்த்தனை திருவிழா, சாங்லி 2026 மார்ச் 13-15**

மகாராஷ்டிரா பிரார்த்தனை திருவிழாவின்போது, கூட்டங்களை ரத்து செய்த காவல்துறையின் ஆணையை உயர்நீதிமன்றம் நீக்கி தீர்ப்பு வழங்கியது. பிரார்த்தனை திருவிழா தொடர்ந்து நடக்க அனுமதி அளித்தது. இரண்டாம், மூன்றாம் நாட்களில் கூட்டங்கள் தடையின்றி நடந்தன. ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 50,000 பேர் நேரடியாக பங்கேற்றனர்; சமூக ஊடகங்கள் வழியாக லட்சக்கணக்கானோர் இணைந்தனர்.

Dr. பால் தினகரன், கர்த்தர் நேசிக்கிறார்; ஆசீர்வதிக்கிறார்; தம் ஜனங்களை வர்த்திக்கப்பண்ணுகிறார் என்பதை உறுதியாய்க் கூறினார்; சிலுவையில் வியாதியையும் சாபங்களையும் சகித்த இயேசு கிறிஸ்து வாயிலாக அற்புதங்கள் வருகிறது என்று பிரசங்கித்தார் (உபாகமம் 7:13). உபத்திரவங்களை விசுவாசத்தினால் மேற்கொண்டு, தேவ ஞானத்தை பெற்றுக்கொள்வதன் வாயிலாக, சீர்ப்படுத்துதல் வரும் என்று கூறினார்.

சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், தேவன் ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையானவர் என்று உற்சாகப்படுத்தினார் (சங்கீதம் 46:1). சகோ.சாமுவேல் தினகரன், பரிசுத்த ஆவியானவரின் பெலப்படுத்தும் கிரியை குறித்து பேசினார் (அப்போஸ்தலர் 1:4,5). சகோதரி ஸ்டெல்லா ரமோலாவும் சகோ. டேனியல் டேவிட்சனும் நடத்திய ஆராதனை கூடியிருந்தோர் அனைவரையும் உண்மையாய் துதிக்க வைத்தது.

கூட்டங்கள் முழுவதும் பரிசுத்த ஆவியானவர் வல்லமையான அசைவாடினார். மக்கள் நடுவில் தேவ சமுகம் விளங்கியது.

பாவத்தின் கட்டுகள், அடிமைத்தனங்கள் முறிந்தன. பலர் சுகத்தை, சீர்ப்படுத்தலை, விடுதலையை அனுபவித்தனர். இதன் காரணமாக திரளானோர் தங்கள் இருதயங்களை இயேசுவின் அன்புக்கு ஒப்புக்கொடுத்தனர்.



# எல்லா தடைகளையும் தாண்டிய விசுவாசம்





## போதகர்கள் ஆசீர்வாத கூட்டம்
## 2026 மார்ச் 13

போதகர்கள் ஆசீர்வாத கூட்டத்தின் வாயிலாக பல போதகர்கள் பெலப்படுத்தப்பட்டனர்; ஊக்கப்படுத்தப்பட்டனர். பலர் புதிய அபிஷேகத்தையும் தேவனுடைய தொடுதலையும் பெற்றுக்கொண்டனர். Dr. பால் தினகரன் அவர்களுக்காக பிரார்த்தனை செய்தார்; தேவன் தம் ஜீவனால் அவர்களை நிரப்பவேண்டுமென்றும், அவர்கள் ஊழியத்தை ஆசீர்வதிக்கவேண்டுமென்றும் வேண்டினார். தங்கள் அழைப்பில் உறுதியாக நின்று, உண்மையாய் தேவ வார்த்தையை அறிவிக்க வேண்டுமென்றும், அவருக்கு முன்பாக மக்களை நீதியுடன் வழிநடத்தவேண்டுமென்றும் வேதத்தின் அடிப்படையில் நினைவுறுத்தினார் (வெளிப்படுத்தல் 10:7,11). சகோ. சாமுவேல் தினகரன், தேவனுடைய வழிகளை நம்பும்படியும், அவர்கள் ஊழியத்தை விரிவுபடுத்தி, தேவைகளை சந்திப்பார் என்று விசுவாசிக்கும்படியும் கேட்டுக்கொண்டார் (ஏசாயா 55:9).



பங்காளர் கூட்டம்



போதகர்கள் கூட்டம்



## பங்காளர்கள் ஆசீர்வாத கூட்டம்
## 2026 மார்ச் 14

இயேசு அழைக்கிறார் பங்காளர் கூட்டத்துக்கு தேவன்பேரில் நன்றியறிதலுடனும் விசுவாசத்துடனும் 1,500 ஊழிய பங்காளர்கள் கூடியிருந்தனர்.

அற்புத சுகம், விடுதலை, தெய்வீக அருட்கொடைகள் பற்றிய சாட்சிகள் பகிர்ந்துகொள்ளப்பட்டன; அவர்கள் வாழ்க்கையில் தேவன் செய்த கிரியைகள் மகிமைப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பங்காளரும் தேவனுடைய குடும்பத்தில் பங்காக இருக்கிறார்கள் என்று Dr. பால் தினகரன் ஊக்கப்படுத்தினார்; தேவன் அவர்களைச் சீர்ப்படுத்தி, சமாதானத்தை நிலைப்படுத்துவார் என்று உறுதியளித்தார். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவதற்காக சகோ. சாமுவேல் தினகரன் ஜெபித்தார். ஒவ்வொரு பங்காளருக்காகவும் தனி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அது அவர்கள், தங்கள் வாழ்வில் தேவ ஆவியின் புதிய தொடுதலையும் ஆறுதலையும் உணரச் செய்தது.



# ஆண்டவர் எல்லாவற்றையும் திரும்பத் தருவார்

பிரியமானவர்களே, மே மாதத்திற்குள் நாம் நுழையும்போது, கர்த்தர், ''கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்'' (சங்கீதம் 102:15) என்ற வசனத்தை வாக்குத்தத்தமாக தருகிறார். இது சீயோனுக்கு மட்டுமான நிச்சயம் அல்ல; இம்மாதத்திற்கு உங்களுக்கும் உரியது. சீயோனை மறுபடியும் கட்டும் தேவன், உங்கள் சூழ்நிலைக்குள்ளும் வருவார்; உடைந்தவற்றை மறுபடியும் கட்டுவார்; சமாதானத்தை திரும்ப தருவார். உங்கள் கவலைகளை தமது கவலைகளாக கருதுபவர். அவற்றை முடிக்காமல் விடமாட்டார். அவரது மகிமை மறைந்திருக்காது; வரும் நாட்களில் உங்கள் வாழ்க்கையிலும் வெளிப்படும்.

இப்போதைய சூழ்நிலை உங்களை மாறாக எண்ணும்படி செய்தாலும், அவர் சீயோனின் வாசல்களை நேசிக்கிறார் என்றும், கைவிடப்படாதவள்(ன்) என்று உங்களை அழைப்பதாகவும் வேதம் கூறுகிறது (சங்கீதம் 87:2; ஏசாயா 62:4). காரியங்கள் ஏன் தாமதிக்கின்றன என்றும், 'முயற்சிகள் ஏன் பலனளிக்கவில்லை என்றும், ஏன் வாசல்களை மூடியே இருக்கின்றன?' என்றும் நீங்கள் நினைக்கலாம். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து பாரத்தோடு இருக்கலாம். அவர்களை பள்ளியில் / கல்லூரியில் சேர்ப்பதற்காக அங்குமிங்கும் அலைந்துகொண்டிருக்கலாம்; மற்றவர்களின் உதவியை நாடலாம்; வேண்டிய பொருளாதாரத்தை திரட்டுவதற்கு தத்தளித்துக்கொண்டிருக்கலாம். இந்தக் கவலைகள் உங்கள் இருதயத்தை மிகவும் பாரப்படுத்தி, உங்களை சலிப்பில் தள்ளியிருக்கலாம்.

ஆனால், இவற்றின் மத்தியிலும் கர்த்தர், ''**நான் உன்மேல் நினைவாயிருக்கிறேன்**'' என்று கூறுகிறார் (சங்கீதம் 40:17). உங்கள் சூழ்நிலையை அவர் காணாததுபோல் இருக்கமாட்டார்; உங்கள் தேவையை மறக்கவும் மாட்டார். அவர் அமைதியாக பின்னணியில் கிரியை செய்துகொண்டிருப்பார். நெடுங்காலமாய் மூடியிருக்கும் வாசல்கள் திறக்கும்; ஏற்ற சமயத்தில் ஒத்தாசை வந்து சேரும். உங்கள் சுய முயற்சிகளால் செய்ய முடியாமல் இருந்தவற்றை, தேவனே தம் ஏற்ற சமயத்தில் ஒழுங்கு பண்ணுவார்.



வேதம், ''**அவர்கள் நெடுங்காலம் பாழாய்க் கிடந்தவைகளைக் கட்டி பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து தலைமுறை**

Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org

Pauldinakaranofficial

**தலைமுறையாய் இடிந்துகிடந்த பாழான பட்டணங் களைப் புதிதாய்க் கட்டுவார்கள்**'' (ஏசாயா 61:4) என்று கூறுகிறது. உங்கள் வாழ்க்கையில் ஆண்டவர் இப் படியே செய்வார். ஆண்டாண்டு காலமாய் தடைபட்டி ருந்தவை யாவும் நகர தொடங்கும்; உடைந்திருந் தவை மறுபடியும் உருப்பெறும். காத்திருக்கும் காலம் முடிவு பெறும். சீர்ப்படுதலின் காலம் ஆரம்பிக்கும். தேவனுடைய இந்தக் கிரியை உங்களுடன் நின்று விடாது; உங்கள் பிள்ளைகள், வரும் சந்ததி யாவும் இந்த ஆசீர்வாதத்தை அனுபவிப்பார்கள். இப்போது பாழாய்க் கிடப்பதாகத் தோன்றுவது, தேவனுடைய உண்மைக்கு விரைவிலேயே சாட்சியாகும்; தேவ கரம் செயல்படுவதை நீங்கள் காண்பீர்கள்.

### உங்கள் இழப்பு, பாக்கியமாக திரும்பும்

**''என் ஜனமாகிய இஸ்ரவேலின் சிறையிருப்பைத் திருப்புவேன்; அவர்கள் பாழான நகரங்களைக் கட்டி, அவைகளில் குடியிருந்து, திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து, தோட்டங்களை உண்டாக்கி, அவைகளின் கனிகளைப் புசிப்பார்கள்**'' (ஆமோஸ் 9:14).




தொடர்ந்து பிரயாசப்பட்டாலும் பலனையே காணமுடியாத காலங்கள் இருக்கலாம்; நீங்கள் கடினமாய் உழைத் தும் முன்னேற்றம் தாமதிக்கலாம்; நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காமல் இருக்கலாம். எல்லாமே எதிரிடையாக நடப்பதாகவும் நீங்கள் நினைக்கலாம். ஆனால், ஆண்டவர் அது நீடிப்பதில்லை என்கிறார்.

வேதம், ''**செங்கல்கட்டு இடிந்து போயிற்று, பொளிந்த கல்லாலே திரும்பக் கட்டுவோம்**'' (ஏசாயா 9:9) என்று கூறுகிறது. தேவன் திரும்ப கட்டும்போது, அவர் வெறுமனே இழந்த வற்றை மட்டும் சீர்ப்படுத்துவதில்லை. அவர் அதை பெலப்படுத்தி, நேர்த்தியாக்குகிறார். உங்கள் வியாபா ரமோ, தொழிலோ லாபமின்றி தத்தளித்துக்கொண்டி ருந்தால், ஆண்டவர் உங்களுக்கு புதிய பாதை களைத் திறப்பார். உங்களுக்கு ஞானத்தை, புதிய எண்ணங்களை, ஏற்ற வாய்ப்புகளை தருவார்; அவை வளர்ச்சியையும் ஸ்திரத்தன்மையையும் கொடுக்கும்.

உங்கள் கைகளின் பிரயாசத்தின் பலனை இதற்கு முன் அனுபவிக்காத அளவில் காண தொடங்குவீர் கள். 'திராட்சத்தோட்டங்களை நாட்டி, அவைகளுடைய பழரசத்தைக் குடித்து...' என்பதன் பொருள், நீங்கள் உழைத்தவற்றுக்கான பலனை மெய்யாய் அனுப விப்பீர்கள் என்பதாகும். கர்த்தர் உங்கள் பிரயாசங்க ளுக்கான பலன்களை யாரும் எடுத்துக்கொள்ளாமல் காப்பார் (சங்கீதம் 128:2). உங்கள் பிரயாசத்திற்கான திருப்தியை அளிப்பார்; உங்கள் வாழ்க்கை கனி கொடுப்பதாகவும், பூரணப்பட்டதாகவும் விளங்கும். அவர் பரிபூரணத்தை, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை வாக்குப்பண்ணுகிறார்; தம் ஜனங்களை ஆசீர்வதிக்கவே பிரியமாயிருக்கிறார் (உபாகமம் 8:10; எண்ணாகமம் 24:1).

இதை யோபின் வாழ்க்கையில் தெளிவாக பார்க்கி றோம். பெருஞ்செல்வந்தனாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்த அவன், ஒரே தருணத்தில் தன் ஆஸ்தி, குடும்பம், உடல் நலம் எல்லாவற்றையும் இழந்துபோனான். ஆனாலும், மிகுந்த இழப்பின் மத்தியிலும் தேவனை பற்றிக்கொண்டான்; அவரை விட்டு திரும்பவில்லை. கடைசியில் கர்த்தர், அவன் இழந்தவற்றையெல்லாம் திரும்ப கொடுத்ததோடு, முன்பிலும் அதிகமாக அவனை ஆசீர்வதிக்கவும் செய்தார். வேதம், ''**கர்த்தர் யோபின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலை மையை ஆசீர்வதித்தார்**'' (யோபு 42:12) என்று கூறுகிறது. அவன் தொடக்க நாட்களைக் காட்டிலும் பிந்தின நிலை அதிக ஆசீர்வாதமாக இருந்தது. தேவ னுடைய சீர்ப்படுத்துதல் ஒருபோதும் அரைகுறையாக இருக்காது; முழுமை யாகவும் நிரம்பி வழிவதாகவும் இருக்கும் என்று காட்டுகிறது.

அவ்வண்ணமாகவே, தாவீதின் வாழ்க்கை, எல்லாவற்றையும் இழக்கக் கொடுத்தாலும் தேவனால் எல்லாவற்றை யும் திருப்ப முடியும் என்பதை நினைவுப் படுத்துகிறது. தாவீது எல்லாவற்றையும் இழந்ததால், அவனுடனே இருந்தவர்கள் கூட அவனுக்கு விரோதமாக திரும்பி னார்கள். ஆனாலும், அவன் கர்த்தரிட மாய் திரும்பி, அவரது வழிகாட்டுதலை தேடியதால், அவர் அவனைப் பெலப் படுத்தி, அவனிடமிருந்து எடுக்கப்பட்டவை அத்தனையையும் திருப்பிக்கொள்ளும்படி செய்தார். ஒன்றும் குறைவுபடவில்லை. ''**அவர்கள் கொள்ளை யாடிக்கொண்டுபோன எல்லாவற்றிலும், சிறியதிலும், பெரியதிலும், குமாரரிலும், குமாரத்திகளிலும், ஒன்றும் குறைபடாமல், எல்லாவற்றையும் தாவீது திருப்பி கொண்டான்**'' (1 சாமுவேல் 30:19). இதுவே தேவனு டைய உண்மையாயிருக்கிறது. அவர் முழுமையாய் திரும்ப அளிப்பதோடு, தாம் திரும்ப அளித்தவற்றை நிலைப்படுத்தவும் செய்வார்.

**''விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப்போனவைகளை மறுபடியும் சீர்ப்படுத்தி, அதைச் செவ்வையாக நிறுத்துவேன்**'' (அப்போஸ்தலர் 15:17) என்று ஆண்டவர் உறுதியளிக் கிறார். உங்கள் குடும்பத்துக்குச் சொந்தமானவை தவறிப்போனதாக நீங்கள் எண்ணினாலும், ஆண்ட வர் தம் வழியால் அவற்றைத் திரும்பக் கொடுப்பார். உங்கள் முயற்சிகள் வீணாகாது. இப்போது காணப் படும் சூழ்நிலை எப்போதுமே நீடிக்காது. ஆண்டவர் அதை மாற்றி, உங்களைத் தம் ஆசீர்வாதத்தில் நிலைப்படுத்துவார்.

## குடும்பத்தின் தத்தளிப்பு மாறும்; சமாதானம் திரும்பும்

**“நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்” (யோவேல் 2:25)**

குடும்பம் தேவன் உருவாக்கியது. அன்பும், ஆதரவும், சமாதானமும் விளங்கும் இடமாக சிருஷ்டிக்கப்பட்டது. ஆனாலும், பல குடும்பங்கள், சமாதான சீர்குலைவுக்குள்ளாக கடந்துசெல்கின்றன. சின்ன சச்சரவுகள் பெரிய பாரமாக மாறுகின்றன. வீட்டில் நிரம்பியிருந்த சந்தோஷம், விரைவிலேயே மங்குவதற்கு தொடங்குகிறது.




ஆனால், தேவன் உங்கள் குடும்பத்தை மறந்துபோக மாட்டார். அவர் இழந்துபோன வருஷங்களை திரும்ப தருவதற்கு மட்டுமல்ல, உங்கள் வீட்டில் நிரம்பியிருந்த சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தர வல்லவராயிருக்கிறார்.

*சகோ. தயாளனின் சாட்சி இந்த உண்மையைக் காட்டுகிறது. மனைவியோடும் இரு மகள்களோடும் அவர் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார். வீடு சந்தோஷத்தினால் நிறைந்திருந்தது. சென்னையில் ஒரு இருசக்கர நிறுவனத்தில் வேலை செய்து வந்த அவருடைய வாழ்க்கை, கோவிட் பெருந்தொற்றினால் பாதிப்புக்குள்ளானது. புதுச்சேரிக்கு சென்ற அவர், தன் வாழ்வாதாரத்துக்காக இரு சக்கர வாகனங்களின் உபரி பாகங்களை விற்பனை செய்ய ஆரம்பித்தார். கடும் பிரயாசப்பட்டும் தொழில் சிறக்கவில்லை. மூன்று ஆண்டுகள் போராடினார். இதனால் குடும்பமும் பாதிக்கப்பட்டது. முன்பு அனுபவித்துக்கொண்டிருந்த சமாதானம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய தொடங்கியது.*

*இந்தக் கடினமான சூழலில், தான் சென்னை அடையாறில் இருக்கும் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்துக்கு தாம் சென்று ஜெபித்ததை நினைத்துப் பார்த்தார். புதுச்சேரியில் இருக்கும் ஜெப கோபுரத்துக்கு விசுவாசத்துடன் சென்றார். அங்கு அவரும் அவரது மனைவியும் தன்னார்வ ஊழியம் செய்ய ஆரம்பித்தனர். தங்கள் போராட்டத்தின் நடுவிலும் தேவனை கிட்டிச் சேர முயன்றனர். புதுச்சேரியிலுள்ள பங்காளர்களுக்காக ஜெபிக்க நான் சென்றிருந்தபோது, தன் குடும்பத்தின் நிலையைக் கூறினார். நான் ஜெபித்தபோது, ஆண்டவர், இழந்த எல்லாவற்றையும் தாம் இரட்டிப்பாய் திரும்ப அளிப்பதாக தெளிவாகக் கூறினார். ஒரு வாரத்திற்குள்ளாக, எதிர்பார்க்காத காரியம் நடந்தது. நண்பர் ஒருவர் முந்தைய வேலையை திரும்ப பெறுவதற்கு உதவினார். ஆண்டுக்கணக்கில் தாமதித்தது, விரைவிலேயே நிறைவேறியது. தற்போது அவரது குடும்பம் மறுபடியும் சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்கிறது. அவரது மகள்கள் இயேசு அழைக்கிறார் வாலிபர் ஊழியத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முன்பு கடினமாய் தோன்றியது, தேவனுடைய திரும்ப அளிக்கும் கிருபைக்கு சாட்சியாக மாறியது.*

அவ்வாறே, ஆண்டவர் உங்கள் குடும்ப சூழ்நிலைக்குள் வருவார். சிரமமாக தோன்றுவதை சீர்ப்படுத்துவார்; தவறான புரிதல்களை மாற்றி, சரியாக புரிந்துகொள்ளும்படி செய்வார்; சமாதானத்தினாலும் தமது பிரசன்னத்தினாலும் உங்கள் வீட்டை மறுபடியும் நிரப்புவார்.

## நற்பெயர், கனத்துடன் திரும்பும்

**“கர்த்தருடைய வாய் சொல்லும் புது நாமத்தால் நீ அழைக்கப்படுவாய்” (ஏசாயா 62:2)**

சூழ்நிலையாலோ, தவறான புரிதலினாலோ அல்லது மற்றவர்களின் வார்த்தைகளாலோ ஒருவருடைய பெயர் கெடுக்கப்படுகிறது. அது மற்றவர்களோடு பழகுவதற்கு, மற்றவர்கள் தங்களைப் பற்றி என்ன நினைப்பார்களோ என்ற தயக்கத்தை அவர்களுக்கு உண்டாக்குகிறது.

ஆனால், ஆண்டவர் கனத்தை திரும்ப அளிக்கிறார். அவர் குற்றச்சாட்டுகளுக்கும், தவறான புரிதல்களுக்கும், உங்கள் பெலவீனங்களுக்கும் அப்பாற்பட்டு உங்களைப் பார்க்கிறார். உங்கள் பெயர் பாதிக்கப்பட்டால், அவர் தம்முடைய நேரத்தில் உங்களை உயர்த்துவார். வேதத்தில் கூறப்பட்டுள்ளபடி, நீங்கள் வெட்கத்தை அனுபவித்த இடத்தில் அவர் புகழ்ச்சியையும் கனத்தையும் அருளுவார் (செப்பனியா 3:19,20).

*கொல்கத்தாவைச் சேர்ந்த டிவோனிட்டா என்ற சகோதரியின் சாட்சி இதை அழகாகக் காட்டுகிறது. பொறியியலில் பட்டமேற்படிப்பு முடித்த அவர்கள், பெருந்தொற்றின் காலத்தில் ஜாம்ஷெட்பூருக்கு மாற்றப்பட்டார்கள். அது ஆண்கள் நிறைந்த தொழிற்சாலையாயிருந்தது. அவர்கள் பெண் என்பதாலும், கிறிஸ்துவை விசுவாசிப்பதாலும், உரிய மரியாதை கொடுக்கப்படாமல் கேலி செய்யப்பட்டார்கள். இந்தச் சூழ்நிலையில், வயதான தன் தாயாரை கவனிப்பதற்காக நீண்ட*

*தூரம் பயணித்தாலும், தன் பொறுப்பை உண்மை யாய் நிறைவேற்றி வந்தார்கள். திமாப்பூரில் நடந்த இயேசு அழைக்கிறார் தீர்க்கதரிசன ஜெப பயிற்சியில் கலந்துகொண்ட அவர்களுக்காக ஜெபித்தபோது, கர்த்தர், அவர்கள் திரும்பும்போது எதிர்பாராத செய்தி காத்திருக்கும் என்று தீர்க்கதரிசன வார்த்தையைக் கொடுத்தார். அதை அவர்கள் விசுவாசத்துடன் பிடித்துக் கொண்டார்கள். விரைவிலேயே அவர்கள் சொந்த ஊருக்கு பணியிடமாற்றம் செய்யப்பட அனுமதி கிடைத்தது. அவமரியாதையை அனுபவித்த இடத் திற்குப் பதிலாக கௌரவத்தை, விடுதலை, சமாதா னத்தை அனுபவிப்பதோடு, தன் அம்மாவை எந்தப் போராட்டமும் இன்றி பராமரிக்கும்வண்ணம் அந்த இடத்திற்கே மாறுதல் கிடைத்தது.*

அந்த சகோதரிக்கு கனத்தை திரும்ப கொடுத்த கர்த்தர், உங்களுக்கும் அப்படியே செய்வார். அவ மரியாதைப்படுத்தும் இடத்தை, உங்கள் மரியா தையை தம் தயவால் ஸ்திரப்படுத்தும் இடமாக மாற்றுவார்.




### மங்குதலுக்குப் பதிலாக மகிமை

**"முந்தின ஆலயத்தின் மகிமையைப்பார்க் கிலும், இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்"** (ஆகாய் 2:9)

உங்கள் வாழ்க்கையிலிருந்து தேவ பிரசன்னம் மங்கிவிட்டதாக நினைக்கக் கூடிய தருணங்கள் வரலாம். மீண்டும் அந்த அந்நியோந்நியத்தை அனுபவிக்க முடியுமா என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் தேவனின் வாக்குத்தத்தம், முந்தின மகிமையைக் காட்டிலும் பிந்தின மகிமை சிறந்திருக்கும் என்று தெளிவாகக் கூறுகிறது. நீங்கள் அவரை உண்மையாய் தேடும் போது, அவரது பிரசன்னம், ஆழமானதாக, இன்னும் வல்லமையுள்ளதாக திரும்ப வரும்.

*திருநெல்வேலியைச் சேர்ந்த சகோ. மகேந்திரன் இந்த சீர்ப்படுத்துதலை தன்னுடைய வாழ்க்கையில் அனுபவித்துள்ளார். அவர் நெடுங்காலமாக மதுவுக்கு அடிமையாக இருந்ததினால், குடும்பத்தில் வேதனை யும் பிரச்னையும் காணப்பட்டது. அவர் வாழ்வில் தேவ சமாதானம் இல்லை. அவரது வாழ்வு, இருக்க வேண்டியதற்கு எதிரான நிலையில் இருந்தது. ஆனால், தேவன் அவரை அப்படி விட்டுவிடவில்லை. இயேசு அழைக்கிறார் ஊழியத்தோடு அவர் தொடர்பு கொண்டு ஜெப உதவி பெற்றுக்கொண்டபின்னர், மது அடிமைத்தனத்திலிருந்து பூரணமாய் விடுவிக்கப் பட்டார். ஆனாலும், வியாபாரத்தில் கடன் பெரிய சவா லாக எழுந்தது. அந்தச் சூழ்நிலையில், மாற்றத்தை எதிர்பார்த்து, அவர் 'இயேசு அழைக்கிறார்' பிரார்த் தனை திருவிழாவில் கலந்துகொண்டார். ஜெப வேளையில், தேவ கரம் அவருக்குப் பரிபூரண பலனை அருளுவதாக தீர்க்கதரிசன வார்த்தை கொடுக்கப்பட்டது. அந்த தருணத்திலேயே அவர் தன் உள்ளத்தில் தெய்வீக சமாதானத்தையும் பெலனை யும் உணர்ந்தார். நெடுங்காலமாக அவை இல்லா திருந்தன.*

*ஆண்டவர் அத்துடன் நின்றுவிடவில்லை. அதன் பின் அவரது கடன்கள் எல்லாவற்றையும் அடைக்கும் படியும், வாழ்வில் முழு விடுதலையை அனுபவிக்கும் படியும் செய்தார். இன்று அவர் வாழ்க்கை, திரும்பப் பெற்றுக்கொள்வதற்கு சாட்சியாக உள்ளது. முன்பு கருகலாக காணப்பட்ட அவரது வாழ்க்கை, தேவ மகிமையால் நிரம்பியதாக உள்ளது. அவர் சந்தோஷத் துடனும் விடுதலையுடனும் ஆண்டவருக்கு ஊழியம் செய்கிறார்.*

அற்புதங்களின் தேவன் உங்களுக்கும் அப்படியே செய்வார். காணாமற்போனவற்றை திரும்பத் தருவார்; உடைந்தவற்றை மீண்டும் கட்டுவார்; கூடாதென்று காணப்படும் பகுதிகளில் விடுதலையைக் கொண்டு வருவார். அவரது கரங்களில் உங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்கும்போது, அவருடைய சீர்ப்படுத்தும் வல்லமையை யும், அவரது மகிமையையும் மிகவும் அதிகமான அனுபவிக்கத் தொடங்கு வீர்கள். அவர் உங்களை உயர்த்தி, நீங்கள் நினைப்பதைக் காட்டிலும் அதிக மாக உங்களைப் பயன்படுத்துவார். யோசேப்பு, தேசங்களை வழிநடத்தி யதுபோல, கர்த்தர், ஞானத்தையும் தயவையும் உங்களுக்கு அருளுவதோடு, அதிகாரத்தில் இருப்பவர்களும் தேவ கிருபை உங்கள்மேல் இருப்பதை அறிந்து கொள்ளச் செய்வார் (ஆதியாகமம் 41:42). அவர் தமது ஆவியினால் உங்களை நிரப்புவார்; தம் வார்த்தையைப் பேசும்படி யான கிருபையை உங்களுக்கு அருளிச் செய்வார் (வெளிப்படுத்தல் 10:11).

நீங்கள் அவரை தொடர்ந்து தேடும் போது, உங்கள் வாழ்க்கை நாளுக்கு நாள் மறுரூபமாகும்; அவரது மகிமை அதிகமதிகமாக காணப்படும். **"ஆவியாயிருக் கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்"** என்று எழுதப் பட்டுள்ளபடி ஆகும் (2 கொரிந்தியர் 3:18). தேவ னுடைய சீர்ப்படுத்தும் கரம் உங்கள்மேல் அமர்ந்து, அவரது பரிபூரணத்தால் நிரம்பும்படி உங்களை வழிநடத்துவதாக.

**ஜெபம்: தகப்பனே, திரும்ப அளிக்கக்கூடிய உமது கரம் உம்முடைய ஜனங்கள்மேல் அமருவ தாக. அவர்கள் வாழ்க்கையில் உடைந்துபோன வைகளை திரும்பக் கட்டுவதாக; சமாதானத்தை யும், பரிபூரணத்தையும் அளிப்பதாக. இழப்புகளை சாட்சியாக மாற்றட்டும்; எல்லா பாரத்தையும் அகற்றி, உம் தயவால் வாழ்க்கையை நிலைப் படுத்தட்டும், ஆமென்.**

# சமூக ஊடக ஊழிய ஸ்பான்சர்

விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் (ரோமர் 10:17)




இரைச்சல் மிகுந்த உலகில், தேவனின் சத்தம், பிரசங்க பீடங்கள் வாயிலாக மட்டுமன்றி, பல்வேறு திரைகள் வாயிலாகவும் மக்களைச் சென்றடைகிறது. "ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்" (நீதிமொழிகள் 25:11) என்றபடி, ஏற்றவேளையில் கூறப்பட்ட வார்த்தைகள் ஜீவனை அளிக்கும். இயேசு அழைக்கிறார் சமூக ஊடக நிகழ்ச்சிகள் தினமும் மொபைல்போன்கள், டிஜிட்டல் தளங்கள் வாயிலாக தேவனுடைய வார்த்தைகளை சுமந்துசெல்கின்றன; மௌனமாய், நம்பிக்கைக்காய் முறையிட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு இருதயத்தையும் வீடுகளுக்குள், மருத்துவமனை அறைகளுக்குள், வகுப்பறைகளுக்குள் சந்திக்கின்றன.

## அதன் பலன்

"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" (ஏசாயா 55:11). தேவனுடைய வார்த்தை தொடும்; சீர்ப்படுத்தும்; உயிர்ப்பிக்கும்.

*என் பெயர் ரஜனி. சொந்த ஊர் கேரளா. நான் படிக்கும்போதே என் தந்தையை இழந்தேன். அதனால் தீவிர மனச்சோர்வுக்குள்ளானேன். நிராகரிப்புகள், தொடர் தோல்விகள், பணக்கஷ்டம் என்னை சஞ்சலப்படுத்தின. தாங்க முடியாத நிலையை அடைந்தேன். அந்த இருண்ட தருணத்தில், யூடியூப்பில் இயேசு அழைக்கிறார் நிகழ்ச்சியைப் பார்க்க நேரிட்டது. சாமுவேல் பால் தினகரன் அளித்த செய்திகள் எனக்கு மிகுந்த தைரியத்தை அளித்தன. நான் கேட்டுக்கொண்டிருந்தபோதே தேவ வார்த்தை உடைந்த என் உள்ளத்திற்குள் பேச தொடங்கியது. பாரம் அகன்றது; தற்கொலை எண்ணங்கள் மறைந்தன; தேவ சமாதானத்தால் நிரப்பப்பட்டேன். புதுப்பெலத்துடன் படிக்க ஆரம்பித்து, சிறப்பாய் விளங்கினேன். தேவனுக்கே மகிமை!*

ஏற்ற வேளையில் ரஜனியை அடைந்த ஒரே ஒரு செய்தி அவர்கள் வாழ்க்கையை முழுவதுமாய் மாற்றியது. இதுவே டிஜிட்டல் ஊடகம் வாயிலாக பரவும் தேவ வார்த்தையின் வல்லமையாகும்.

## தேவை

மாதந்தோறும் 750 நிகழ்ச்சிகள் யூடியூப் உள்ளிட்ட இயேசு அழைக்கிறார் சமூக ஊடக தளங்கள் வாயிலாக ஜெபத்துடன் பகிரப்படுகின்றன; அவை மக்களின் வாழ்க்கையை மறுரூபப்படுத்து கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியும் தேவ வார்த்தை வாயிலாக தேசங்களில் வாழும் மக்களுக்கு நம்பிக்கையை, சுகத்தை, வழிகாட்டுதலை அருளு கின்றன.




இந்த ஊழியத்திற்கு பெரிய பொறுப்புணர்வும் செலவும் தேவைப்படுகிறது. ஒவ்வொரு நிகழ்ச்சிக் கும் ஒளிப்பதிவு கூடம், தொழில்நுட்ப சாதனம், படத்தொகுப்பு, டிஜிட்டல் சேமிப்பகம், ஒளிபரப்பு கட்டணம் இவற்றுடன் பின்னணியில் அர்ப்பணிப் புடன் பணியாற்றும் குழுவினரும் உள்ளனர். இந்த அளவு பலன் கிடைப்பதைத் தாங்குவதற்கு ஒரு மாதத்திற்கு ஏறக்குறைய 1 கோடி ரூபாய் தேவை. நாங்கள் ஜெபத்துடன் முயற்சியை முன்னெடுக்கும்போது, இயேசுவின் வாழ்வை மறுரூபமாக்கும் செய்தி அனுதினமும் 6 லட்சம் மக்களை சென்றடைய வேண்டும் என்று விரும்புகிறோம்.

தேவனுடைய வார்த்தை எந்தத் தடையுமின்றி தொடர்ந்து பரவுவதற்கு இந்தப் பணி தொடர்ந்து மலையின்மேல் ஏறுவது போன்று பிரயாசம் மிக்கதாகும். யாராவது ஒருவர் இயேசுவை சந்திப்பதற்கு ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒரு வாய்ப்பாகும். இரட்சிக்கப்படுவதற்கு, சீர்ப்படுத்தப்படுவதற்கு, பெலப்படுத்தப் படுவதற்கான முயற்சியாகும். இந்தப் பணி தொடருவதற்கு உங்கள் ஆதரவு உதவும்.




### ஸ்பான்சர் - ரூ.30,000

நாள் முழுவதற்குமான இன்றைய ஆசீர்வாதம் நிகழ்ச்சியை ஸ்பான்சர் செய்து, ஆயிரக்கணக் கானோருக்கு தேவ வார்த்தை சென்று சேர உதவும் பாத்திரமாகலாம்.

- உங்கள் ஜெப விண்ணப்பங்களுக்காக தினசரி வாக்குத்தத்த வீடியோவில் Dr. பால் தினகரன் ஜெபிப்பார்; உங்கள் குடும்பப் புகைப்படமும் அதில் இடம் பெறும்.
- யூடியூப் உள்பட இயேசு அழைக்கிறார் அனைத்து சமூக ஊடக தளங்களிலும் நீங்கள் ஸ்பான்சர் செய்த வீடியோ வெளியாகும்; அன்று முழுவதும் அதைப் பார்க்கலாம்.
- உங்களுக்கான தனி ஜெபம் இடம் பெற்ற நிகழ்ச்சி வீடியோவின் இணைப்பு வாட்ஸ்அப் வாயிலாக உங்களுக்குப் பகிரப்படும்.

### இணைந்து தாங்குதல் (CO-SPONSOR) ரூ.10,000

மற்றவர்களுடன் இணைந்தும் நீங்கள் தாங்கி, இந்த நிகழ்ச்சியின் ஆசீர்வாதத்தை பகிர்ந்துகொள்ளலாம்.

- உங்கள் பெயரும் புகைப்படமும் தொடர்புடைய நிகழ்ச்சியில் இடம் பெறும்.
- உங்கள் ஜெப விண்ணப்பங்களுக்காக Dr. பால் தினகரன் பிரார்த்தனை செய்வார். அந்த வீடியோ வாட்ஸ்அப் வாயிலாக உங்களுக்கு அனுப்பப்படும்.
- யூடியூப் உள்பட இயேசு அழைக்கிறார் அனைத்து சமூக ஊடக தளங்களிலும் நீங்கள் ஸ்பான்சர் செய்த வீடியோ வெளியாகும்; அன்று முழுவதும் அதைப் பார்க்கலாம்.

உங்கள் ஆதரவினால் தேவனுடைய வார்த்தை தினமும் லட்சக்கணக்கானோரை அடைந்து, கணக்கற்றோர் வாழ்வில் நம்பிக்கையையும் மறுரூபத்தையும் அளிக்கும்.

மேலும் விவரங்களுக்கு: ஜெப கோபுரம்: உங்கள் பகுதியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்துக்கு சென்று தெரிந்துகொள்ளலாம். இணையதளம்: www.jesuscalls.org/sms தொலைபேசி: 9500127277 முகவரி: ஜெப கோபுரம், 16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028. SMSக்கு நன்கொடை அளித்திடுங்கள். இன்று ஒருவர் தேவனுடைய சத்தத்தைக் கேட்பதற்கு காரணமாய் விளங்குங்கள்.

Scan QR Code donate to SMS

குடும்ப பகுதி



# எல்லாவற்றையும் திரும்பக் கொள்வீர்கள்

அன்பானவர்களே,

நிச்சயமின்மையும், முறிவும், மௌன யுத்தங்களும் நிறைந்திருக்கும் இவ்வுலகில் ''திரும்பத் தருவேன்'' என்ற வாக்குத்தத்தம், தேவன் தம் ஜனங்களுக்கு அளிக்கும் மிகவும் வல்லமையான நிச்சயங்களுள் ஒன்றாக இருக்கிறது. வேதத்திலுள்ள இந்த வார்த்தைகள், தேவனால் சீர்ப்படுத்தப்பட முடியாத அளவுக்கு, எந்தச் சூழ்நிலையும் தொலைதூரமானதாகவோ, எந்த வாழ்க்கையும் நொறுங்கிப்போனதாகவோ, எந்த நம்பிக்கையும் காணாமற்போனதாகவோ இல்லை என்று நமக்கு நினைவுப்படுத்துகின்றன.

கர்த்தர், ''**என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன்; நீங்கள் உயிரடைவீர்கள்**'' (எசேக்கியேல் 37:14) என்று கூறுகிறார். எல்லாவற்றையும் இழந்த மக்களுக்கு இந்த வாக்குத்தத்தம் முதலாவதாக உரைக்கப்படுகிறது. இஸ்ரவேல் ஜனங்கள், நாட்டைவிட்டு வெளியேறிய நிலையில், பல ஆண்டுகளாக நம்பிக்கையற்றிருந்தார்கள். ''இதோ, எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று; எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று; நாங்கள் அறுப்புண்டுபோகிறோம்'' என்ற அவர்களது கூப்பிடுதல் உள்ளத்தை உடைக்குமளவுக்கு தீவிரமாயிருந்தது. எதிர்காலத்தை அவர்களால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. அவர்கள் அறிவுக்கெட்டிய அளவுக்கு வாழ்க்கை முடிந்துபோனதாகவே காணப்பட்டது.



அவர்களுடைய நிலையை விவரிப்பதற்காக, தேவன், எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு உலர்ந்த எலும்புகளால் நிறைந்திருந்த பள்ளத்தாக்கை தரிசனமாகக் காண்பித்தார். இது வெறுமனே சரீரப்பிரகாரமான மரணமாக மட்டுமல்லாமல், ஆவிக்குரிய வெறுமையையும் உயிரற்ற விசுவாசத்தையும் உணர்த்துவதாக இருந்தது. அந்த எலும்புகள் உயிரற்றிருந்தன; இணைப்புகள் தகர்க்கப்பட்டிருந்தன; சிதறியிருந்தன. நம்பிக்கையே இல்லாத நிலையைக் காட்டின.

மனுஷரால் கூடாதவைகள் எதுவும் தேவனால் ஒருபோதும் கூடாதவையாக இருக்காது. அந்தப் பள்ளத்தாக்கில் எசேக்கியேலை வழிநடத்திய அதே

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

தேவன், அதை மாற்றுவதற்கு தம் வல்லமையை வெளிப்படுத்தினார். உலர்ந்த அந்த எலும்புகள், அவரது வார்த்தையாலும், அவரது ஆவியாலும் ஒன்றாக இணைந்தன; மாம்சம் உருவானது; அவற்றுக்குள் ஆவி பிரவேசித்தது. முன்பு செத்ததாயிருந்தது; திரும்பவும் உயிர்த்தது. மரித்தவற்றுக்குள்ளும் தேவனால் ஜீவனை ஊத முடியும் என்ற ஆழ்ந்த சத்தியத்தை இந்த தரிசனம் காட்டுகிறது. சீர்ப்படுத்தல் என்பது வெளிப்படையான மாற்றம் மட்டுமல்ல; அது சரீரத்திலும் ஆவியிலும் உண்டாவதுமாகும்.

ஒருவேளை, இன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்களைப் போல் நீங்கள் இருக்கலாம். உங்கள் வாழ்க்கை, முன்னேறாத நிலையை எட்டிவிட்டதாக நீங்கள் நினைக்கலாம். கனவுகள் புதைக்கப்பட்டதுபோல், உறவுகள் முரண்பட்டதுபோல், உடல்நலம் பெலவீனப்பட்டதுபோல், விசுவாசம் அசைக்கப்பட்டதுபோல் காணப்படலாம். நீங்கள், ''நான் மறுபடியும் எப்போது வெளிச்சத்தைக் காண்பேன்?'' என்று கேட்கலாம்.

அப்படிப்பட்ட தருணங்களில் இந்தச் செய்தி நேரடியாக பொருந்தும். தேவனுடைய வாக்குத்தத்தம் இஸ்ரவேலருக்கு மாத்திரம் உரியதல்ல. அவர்களைச் சீர்ப்படுத்திய அதே தேவனால் உங்களையும் சீர்ப்படுத்த முடியும். அவரது ஆவி வரும்போது சகலமும் மாறும். எங்கே ஆவியுண்டோ, அங்கே விடுதலையும் ஜீவனுமுண்டு.

> **உடைந்துபோன சூழ்நிலையை தேவன் தமது ஆவியினால் சீர்ப்படுத்த முடியும். நீங்கள் மறுபடியும் வாழ்ந்திருப்பீர்கள்**

ஜீவனை, பரிபூரண ஜீவனை அருளும்படியே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இரட்சிப்பதற்காக மட்டும் அவர் வரவில்லை; சீர்ப்படுத்துவதும், காணாமற்போனவற்றை திரும்ப கொண்டுவருவதும், மரித்தவற்றை உயிர்ப்பிப் பதும் அவரது நோக்கமாகும்.

*இந்த உண்மையை, இந்தச் சாட்சி அழகாக விளக்குகிறது. பெங்களூருவைச் சேர்ந்த அமுதா என்ற சகோதரி, ஏழு ஆண்டுகள் இரத்தப்போக்கினால் அவதிப்பட்டார்கள். பல்வேறு சிகிச்சைகளைப் பெற்றும் பலனில்லை. கருப்பையை அகற்றும்படி மருத்துவர்கள் ஆலோசனை கூறினார்கள். இந்த வேதனையின் மத்தியில் அவர்களது கணவர் அவர்களைப் பிரிந்துசென்று விட்டார். அதனால், பெலவீனப்பட்டு, பாரப்பட்டு, நம்பிக்கையிழந்தார்கள். நிர்க்கதியான நிலையில் இயேசு அழைக்கிறார் ஜெபக் கூட்டத்தில் கலந்துகொண்டார்கள். அங்கு ஏறெடுக்கப்பட்ட பிரார்த்தனைகள் அவர்கள் குணமடைவதற்கு ஆரம்பமாக இருந்தன. அவர்கள் உபவாசித்து, ஊக்கமாக ஜெபித்தார்கள். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது, அவர்கள் மிகவும் பிரகாசமான ஓர் ஒளியைக் கண்டார்கள். தேவனுடைய தொடுதலை உணர்ந்தார்கள். ''நீ வியாதிப்பட்டிருக்கும்போது நான் உன்னை குணப்படுத்த மாட்டேனா?'' என்ற குரலையும் அவர்கள் கேட்டார்கள். அந்தத் தருணத்தில் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஓர் அற்புதத்தைச் செய்தார். அறுவை சிகிச்சையின்றி, முற்றிலும் சுகம் பெற்றார்கள். அவர்கள் கணவரும் திரும்ப வந்தார். இன்றைக்கு, குடும்பமாக சந்தோஷமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.*

அவர்களுக்கு நடந்தது, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் வெறுமனே எழுத்தில் அல்லாமல், உண்மையாகவும் கிரியை செய்கிறவையாகவும் உள்ளன என்று நினைவுப்படுத்துகின்றன.

உங்கள் சூழ்நிலைகள் எவ்வளவு தீவிரமானவையாக இருந்தாலும் தேவனுக்கு பொருட்டல்ல. உடல்நலமாக இருந்தாலும், முறிந்த உறவாக இருந்தாலும், தத்தளிக்கும் மனமாக இருந்தாலும், சோர்ந்த ஆவியாக இருந்தாலும் அவரால் எல்லாவற்றையும் சீர்ப்படுத்த முடியும். அசைக்கவே முடியாததாக காணப்பட்டவை அசையத் தொடங்கும். மரித்தவையாக காணப்பட்டவை மறுபடியும் உயிர்பெறும். ஆகவே, மனந்தளராதிருங்கள். உங்களைச் சுற்றி நடக்கிறவை அனைத்தும் முடிந்துபோனதாய் தோன்றும்போது தேவன் செயல்பட ஆரம்பிப்பார். பெரும்பாலும் நம்பிக்கை முடியும்போது, அவரது சீர்ப்படுத்தல் தொடங்கும்.

அவரது ஆவியை உங்களுக்குள் அழைத்திடுங்கள். உலர்ந்துபோனவற்றுக்குள் ஊதுவதற்கு அவருக்கு இடங்கொடுங்கள். உங்களால் பார்க்க இயலாவிட்டாலும் அவர் கிரியை செய்கிறார் என்பதை நம்புங்கள். உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு உங்கள் வாழ்க்கை முடிந்துபோனதற்கு அர்த்தமல்ல; அது அற்புதத்திற்கான ஏற்பாடாகும்.

அவரது வாக்குத்தத்தை நீங்கள் பற்றிக்கொள்ளும் போது, உங்கள் வாழ்வில் எப்பகுதியிலும் அவரது சீர்ப்படுத்தும் ஆற்றலை அனுபவிப்பீர்கள். உங்கள் பெலன் புதிதாகும்; உங்கள் விசுவாசம் உயிர்ப்பிக்கப்படும்; உங்கள் சந்தோஷம் திரும்பும்.

நீங்கள் பிழைப்பதோடு, மறுபடியும் சீர்பெறுவீர்கள்; அவரது பரிபூரண ஜீவனை அனுபவிக்கும்படி இரட்டிப்பானதை அடைவீர்கள்.




**தேவனின் உண்மையைக் கொண்டாடுவோம்**
**உங்கள் சாட்சியை பகிர்ந்துகொள்ளுங்கள்!**

படிப்பில் சிறந்து விளங்க இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் ஏறெடுக்கப்பட்ட பிரார்த்தனை வாயிலாக ஆண்டவர் உதவி செய்தாரா? நீங்கள் மாநில அளவில், பள்ளி அளவில், தங்கப்பதக்கம் அல்லது 95 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்கள் பெற்றிருந்தால், உங்கள் சாட்சியை பகிர்ந்து தேவனை கனம் பண்ணும்படி அழைக்கிறோம்.

உங்கள் சாட்சி, தங்கள் வெற்றிக்காக தேவன்மேல் நம்பிக்கை வைப்பதற்கு அநேக மாணவ மாணவியரை உற்சாகப்படுத்தும்.

மின்னஞ்சல்: testimony@jesuscalls.org / தொடர்புக்கு: +91 97919 34442

முகவரி: ஜெப கோபுரம், 16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028.

**என் அன்பு ஊழியப் பங்காளரே,**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

மே மாதத்திற்குள் நாம் நுழையும்போது, உங்கள் வாழ்க்கையில் எந்தக் காலமும் வீணாகப் போகவில்லை; ஆண்டவரால் சீர்ப்படுத்தக்கூடாத எந்த முறிவும் இல்லை என்பதை நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

இம்மாதத்திலும் அவர் உங்களை கரத்தைப் பிடித்து, சிறப்பான காலத்திற்குள் அன்போடு உங்களை வழிநடத்துகிறார். வேதம், "**கர்த்தர் சீயோனைக் கட்டி, தமது மகிமையில் வெளிப்படுவார்**" (சங்கீதம் 102:15) என்று கூறுகிறது. இம்மாதத்தில் தேவன் இந்த நிச்சயத்தை உங்களுக்குத் தருகிறார். அவர் உங்கள் வாழ்க்கையை மறுபடியும் கட்டுகிறார்; இதுவரை நீங்கள் பார்க்காத விதத்தில் அவரது மகிமை வெளிப்படும்.

இந்த ஊழியத்தில் நீங்கள் எங்களோடு வருவதற்காக நன்றி கூறுகிறேன். உங்கள் செயல், உங்கள் பார்வைக்கு சிறியதாக தோன்றலாம்; ஆனால், தேவனின் கரங்களில் அது கணக்கற்ற மக்களுக்கு ஜீவனை, நம்பிக்கையை, சீர்ப்படுத்தலை கொண்டு வருவதாக மாறுகிறது.

செகந்தராபாத்திலுள்ள சி.எஸ்.ஐ. வெஸ்லி ஆலயத்தில் நடைபெற்ற மூன்று ஆராதனைகளிலும் செய்தியளித்து உயிர்த்தெழுந்த நாதரை மகிழ்ச்சியுடன் கொண்டாடினேன். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வாயிலாக மரணம் தோற்கடிக்கப்பட்டது, பயம் அகற்றப்பட்டது, விசுவாசிகள் வெற்றியையும் சமாதானத்தையும் நித்திய நம்பிக்கையையும் பெற்றனர் என்ற செய்தியை பகிர்ந்து கொண்டபோது, அநேகர் ஆண்டவரின் சமுகத்தை வல்லமையானவிதத்தில் அனுபவித்தனர்.

கடந்த மாதத்தில் 1.5 லட்சம் பேர் ஜெப கோபுரங்களுக்கு வந்து, தனிப்பட்ட ஜெபத்தையும் ஆலோசனையையும் பெற்றுக்கொண்டு, தேவனுடைய பதிலை அனுபவித்துள்ளனர். அதேவேளையில் 3.9 லட்சம் பேர் தொலைபேசி ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டு தொலைபேசி அழைப்பின் வாயிலாக ஆறுதலையும் பெலனையும் பெற்றுக்கொண்டு விசுவாசத்தை புதுப்பித்துக் கொண்டுள்ளனர்.

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...



## துதி குறிப்புகள் - உங்கள் வாயிலாக மறுபடியும் கட்டப்படும் வாழ்க்கை

நீங்கள் எங்களோடு நிற்பதால், தேவன் அநேகருடைய வாழ்க்கையை மறுபடியும் கட்டுவதை நாங்கள் கண்டு வருகிறோம்.

தேவனுடைய பெரிதான கிருபையால், சாங்லி கூட்டங்கள் சாட்சியாக அமைந்தன. முதலில் பின்னடைவு ஏற்பட்டாலும் மகாராஷ்டிரா பிரார்த்தனை திருவிழா தொடர்ந்து நடைபெறலாம் என்ற உயர்நீதி மன்ற தீர்ப்பு வெற்றியாய் அமைந்தது. ஏறத்தாழ 50,000 பேர் நேரடியாக கூடினர்; லட்சக்கணக்கானோர் இணையவழியில் இணைந்தனர். தேவ பிரசன்னம் வல்லமையாய் அசைவாடியது. ஆண்டுக்கணக்கில் அடிமைத்தனங்களுக்குள் இருந்தவர்கள் விடுதலை பெற்றனர். குடும்பங்கள் சீர்பொருந்தின. அநேகர் இயேசுவின் அன்பண்டை இழுக்கப்பட்டனர். போதகர்கள் புதிய அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டனர். ஏறக்குறைய 1,500 பங்காளர்களுக்கு தனி ஜெபம் ஏறெடுக்கப்பட்டு, ஆண்டவருக்குள் பெலப்படுத்தப்பட்டனர்.

ஈஸ்டர் தினத்தன்று என்னுடைய குடும்பத்தினருடன்

கடந்த மாதத்தில் ஏறக்குறைய 210 வெளியிட கூட்டங்கள், 'எழும்பி கட்டுங்கள்' சிறப்பு ஆசீர்வாத கூட்டங்கள், மிஷன் நெட்வொர்க் கூட்டங்கள் அனைத்து ஜெப கோபுரங்களிலும் நடத்தப்பட்டன. ஏறத்தாழ 20,600 பேர் இவற்றில் பங்குபெற்று மிகுந்த ஆசீர்வாதம் அடைந்தனர்.

கடிதங்கள், மின்னஞ்சல்கள் வாயிலாக 60,000 பேரின் விண்ணப்பங்களுக்கு ஜெபத்துடன் பதிலளிக்க உங்கள் ஆதரவு உதவியுள்ளது.

டிஜிட்டல் தளங்கள் வாயிலாக 22 லட்சம் பேர் தேவனின் அன்பை அனுபவித்துள்ளனர்.

ஆண்டவர் நம்முடைய சமூக ஊடக தளங்களை வல்லமையாக பயன்படுத்துகிறார். இவற்றால் திரளானோர் தேவனுடைய அன்பை செய்திகள், நேரடி பிரார்த்தனைகள் மற்றும் சாட்சிகள் வாயிலாக அனுபவிக்கின்றனர். 2 கோடியே 80 லட்சம் பேர் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்.

இயேசுவின் அன்பையும் இரக்கத்தையும் அனுபவித்த ஒவ்வொருவரையும் எண்ணி உங்களுடன் இணைந்து தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்.

## காருண்யா - ஆசீர்வாதமான விதை

என் அருமை தங்கை ஏஞ்சலை மே 21ம் தேதி நினைவுகூருவதால், இம்மாதம் விசேஷித்தவிதத்தில் என் உள்ளத்தைத் தொடுகிறது. அவள் உயிர், விதையாக நிலத்தில் விழுந்தது. இன்று, அந்த விதை காருண்யா தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் கல்வி நிறுவனமாக வளர்ந்துள்ளது. மாணவ மாணவியரை வளாகத்தில் காணும்போதெல்லாம், தேவன் எங்கள் மிகுந்த துக்கத்தை எப்படி பல்லாயிரக்கணக்கானோருக்கு ஜீவனையும் நம்பிக்கையையும் நோக்கத்தையும் அளிக்கும்படி மாற்றியுள்ளார் என்பதை நினைத்துக்கொள்கிறேன்.

சிறப்பான கல்வி மற்றும் செய்முறை வழியாக அநேக வாழ்க்கையை காருண்யா தொடர்ந்து உருவாக்கி வருகிறது. 728 ஏக்கரில் விரிந்து பரந்து, தேசிய அங்கீகாரம் மற்றும் மதிப்பீடு கவுன்சலின் NAAC A++ தரச்சான்று, பல்கலைக்கழக மானிய குழுவின் UGC பிரிவு 1 அந்தஸ்து, உலகளாவிய பட்டியலில் இடம் ஆகியவற்றுடன் காருண்யா செயல்படுகிறது. காருண்யா பல்கலைக்கழகம் எஞ்ஜினியரிங், வேளாண்மை, மேலாண்மை, இணையவழி MBA, செயற்கை நுண்ணறிவு, தடய அறிவியல், உயிர்தொழில்நுட்பம், டிஜிட்டல் தடயவியல், வணிகவியல் மற்றும் மீடியா உள்பட அநேக படிப்புகளை வழங்கி வருகிறது. Google, Zoho, SUEZ, Amaron, Festo மற்றும் Edveon ஆகிய முன்னணி நிறுவனங்களின் பங்களிப்பினால் இந்தப் படிப்புகள் சிறப்பு பெறுகின்றன. காருண்யாவில் மாணவர்கள் இரண்டாம் ஆண்டு முதல், வகுப்பு நேரத்திற்கு பிறகு பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்ற ஆரம்பிப்பதன் வாயிலாக நேரடி தொழில் அனுபவத்தைப் பெறுவதுடன் பொருளும் ஈட்டுகிறார்கள். 85க்கும் மேற்பட்ட நாடுகளில் சர்வதேச உள்ளிருப்பு பயிற்சியின் வாயிலாக, மாணவர்கள் உலகளாவிய அனுபத்தையும் 100 சதவீதம் பணியமர்த்தலுக்கான வேலை வாய்ப்புகளையும் பெறுகிறார்கள். 100 சதவீதம் கல்வி கட்டண விலக்கு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் தகுதியுள்ள மாணவர்கள் தங்கள் கனவுகளை நனவாக்கும் வண்ணம் ரூ.10 கோடி மதிப்பிலான கல்வி ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது. 8,000 மாணவ மாணவியர் பாதுகாப்பான விடுதிகளில், நல்ல உணவு வசதி, அத்தியாவசிய தேவைகளுடன் தங்கி படிக்கின்றனர். இந்த வளாகம் பாதுகாப்பானது. காருண்யாவில் சேருவதற்கு 1800 8899 888 என்ற தொலைபேசி எண்ணை தொடர்புகொள்ளுங்கள் அல்லது www.karunya.edu என்ற இணையதளத்தில் விவரங்களை பாருங்கள்.

## தன்னார்வ ஊழியம் செய்ய மாணவர்களுக்கு அழைப்பு

நீங்கள் மாணவராக, மாணவியாக இருந்தால் இந்த விடுமுறைக் காலத்தில் ஜெப கோபுரங்கள் அல்லது சீஷா வாயிலாக தன்னார்வ சேவை செய்யும்படி அன்புடன் அழைக்கிறோம். மக்களுக்கு சேவை செய்தல், ஊழியப் பணிகளில் உதவுவதல், தேவையோடு இருப்பவர்களுக்கு மனதுருக்கத்துடன் உதவுதல் ஆகிய தொண்டுகளை ஆண்டவருக்கென்று செய்ய உங்கள் வரங்களையும் தாலந்துகளையும் பயன்படுத்தலாம். இதற்கு நீங்கள் முன்வரும்போது, ஆண்டவர் உங்கள் அன்பின் பிரயாசத்தை கனப்படுத்துவார் (எபிரெயர் 6:10). உங்கள் படிப்பிலும் எதிர்காலத்திலும் நீங்கள் சிறந்து விளங்கும்படி அவரது ஞானமும் தயவும் உங்கள்மேல் விளங்கும்.

ஜெப கோபுரங்களில் தன்னார்வ ஊழியம் செய்வதற்கு +91 63807 52275 என்ற தொலைபேசி எண்ணையும், volunteer@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்புகொள்ளுங்கள்.

சீஷாவில் சேவை செய்வதற்கு +91 9300600600 என்ற தொலைபேசி எண்ணையும், info@seesha.org என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்புகொள்ளுங்கள்.

## டைனமிக் சிறுவர் முகாம் - அடுத்த தலைமுறையை உருவாக்குதல்

இந்தக் கோடைக்காலத்தில், சிறுபிள்ளைகளின் வாழ்வில் விசுவாசத்தை விதைக்க இருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையும் தேவன் தன்னை நேசிக்கிறார் என்பதையும், தெரிந்துகொண்டிருக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டும். உங்கள் ஆதரவோடு, குழந்தைகள் தேவனை தனிப்பட்டவிதத்தில் அனுபவிக்கக்கூடிய ஒரு தருணத்தை எங்களால் உருவாக்க முடிந்துள்ளது. கடந்த ஆண்டு 15,000க்கும் அதிகமான குழந்தைகள், 105 ஜெப கோபுரங்கள் வாயிலாக தேவனுடைய அன்பினால் தொடப்பட்டனர். இந்த ஆண்டும் 20,000 சிறுபிள்ளைகள் பங்குபெறுவார்கள் என ஜெபத்துடன் எதிர்பார்க்கிறோம். இந்த ஆண்டுக்கான கருப்பொருள் 'முத்திரை மோதிரம்' ஆகும் (ஆகாய் 2:23). ஆறு நாட்கள் நடைபெறும் இந்த முகாமில் செய்கை பாடல்கள், வேதாகம பாடங்கள், கதைகள், செயல்பாடுகள், பிரார்த்தனை வேளைகள் போன்றவை பிள்ளைகளை தேவனிடம் வழிநடத்தும். 4 முதல் 12 வயது வரையிலான உங்கள் பிள்ளைகளை இந்த முகாமுக்கு அனுப்பிவையுங்கள். இதற்கு அனுமதி இலவசமாகும்.

## கேட்டியின் ஊழியம்

சிறுபிள்ளைகளைப் பற்றி யோசிக்கும்போது, விசேஷமானவற்றை பகிர்ந்துகொள்வது எனக்கு அதிக மகிழ்ச்சி. என்னுடைய குட்டிப் பேத்தி கேட்டி, குழந்தைகளுக்கென்று ஒரு யூடியூப் சேனலை ஆரம்பித்திருக்கிறாள். சிறுபிராயத்திலே கர்த்தருக்கேற்ற அறிவில் வளருவதற்கு அது எளிமையான வழியில் உதவும். லெந்து காலத்தில் அவள் உண்மையாய், வேத வசனமும் குட்டி சிந்தனையும் அடங்கிய 40 சிறு வீடியோக்களை அதில் பகிர்ந்து கொண்டிருந்தாள். கிட்டத்தட்ட 1.5 லட்சம் பேர் அதைப் பார்த்துள்ளனர். அவளுடைய சேனலை @Katelyn Dhinakaran நீங்களும் சப்ஸ்கிரைப் செய்வதுடன், உங்கள் பிள்ளைகளுக்கும் அதை பகிர்ந்துகொள்ளுங்கள். தேவனுடைய வார்த்தையை அறிந்துகொண்டு, அவரை கிட்டிச்சேருவதற்கு இது நேர்த்தியான வழியாகும்.

## ஜெபத் தேவைகள்
## சமூக ஊடக ஊழியம் தொடரவேண்டும்

டிஜிட்டல் ஊழியம், அத்தியாவசியமும் அவசரமுமான தேவையாக நம் முன் இருக்கிறது. தினசரி வாக்குத்தத்த செய்திகள், குறுகிய செய்திகள், ஆராதனை பாடல்கள், சாட்சிகள், பல்வேறு டிஜிட்டல் தளங்கள் குறும்படங்கள் உள்ளிட்ட 750க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை தயாரிக்க மாதந்தோறும் ஏறத்தாழ 1 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. இதன் வாயிலாக தேவனுடைய வார்த்தை தடையின்றி தொடர்ந்து மக்களை சென்றடைகிறது (ஏசாயா 55:11).

ஒரு நிகழ்ச்சி இப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உங்கள் ஜெபங்களாலும் ஆதரவாலும் அது தொடர்ந்து வருகிறது. தேவனுடைய வார்த்தை ஒவ்வொரு இருதயத்தையும் தடையின்றி சென்று சேரும்படி இந்த ஊழியத்தை உங்கள் ஜெபங்களால் தாங்கும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன். நீங்கள் ஜெபிக்கும்போதே, சமூக ஊடக ஊழியத்தை பொருளாதார ரீதியாகவும் ஆதரிப்பதற்கு உங்களை வரவேற்கிறேன். இதைக் குறித்த விவரங்களை 8ம் பக்கத்தில் காணலாம். உதாரகுணமுள்ள உங்கள் இருதயத்தை தேவன் ஆசீர்வதிப்பாராக.

## தனிப்பட்ட ஜெப விண்ணப்பம்

ஆண்டவருக்கு நாங்கள் தொடர்ந்து ஊழியம் செய்துவரும்போது, எங்கள் குடும்பத்துக்காக திறப்பில் நின்று ஜெபிக்குமாறு வேண்டுகிறேன். விசேஷமாக, இம்மாதத்தில் பிறந்தநாட்களை கொண்டாடும் என் அம்மா சகோதரி ஸ்டெல்லா தினகரன், மருமகன் டேனியல் டேவிட்சன், முதலாம் பிறந்தநாளை காணும் என் பேரன் ஜேடன் கிறிஸ் ஆகியோரை ஜெபத்தில் நினைத்துக்கொள்ளுங்கள். உங்கள் ஜெபங்கள் எங்களுக்கு பெரிய பெலனும் ஆசீர்வாதமுமாயிருக்கிறது.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

வரும் நாட்களில் ஊழியத்தின் மிக முக்கியமான காலத்திற்குள் அடியெடுத்து வைக்கிறோம். இந்தக் கூட்டத்திற்காக ஊக்கமாக ஜெபித்து தாங்கும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2026 மே 16 - ஆற்காடு லுத்தரன் ஆலய கன்வென்ஷன் - டேனிஷ் மிஷன் மேல்நிலைப் பள்ளி மைதானம், திருவண்ணாமலை.

## ஜெப கோபுரங்களில் விசேஷித்த கூட்டங்கள்

2026 மே 2 & 3 - அனைத்து ஜெப கோபுரங்களிலும் 'எழும்பி கட்டுங்கள்' ஆசீர்வாத கூட்டம்

2026 மே 5 - தும்கா ஜெப கோபுரத்தின் வெளியிட கூட்டம் - கர்பிந்தா

2026 மே 16 - ஜபல்பூர் ஜெப கோபுரத்தின் வெளியிட கூட்டம் - சின்ட்வாடா

2026 மே 19 - டேராடூன் ஜெப கோபுரத்தின் வெளியிட கூட்டம் - பௌரி

2026 மே 21 - Dr. டி.ஜி.எஸ்.தினகரன் ஜெப கோபுரத்தின் வெளியிட கூட்டம் - போரூர்

வரும் மாதங்களில் பல்வேறு நகரங்களில் பிரார்த்தனை திருவிழாக்களையும், தீர்க்கதரிசன மாநாடுகளையும் நடத்த திட்டமிட்டுள்ளோம். இந்தக் கூட்டங்களுக்கு வாசல்கள் திறக்கும்படியும், இவற்றின் வாயிலாக தொடப்படும் ஒவ்வொருவரின் வாழ்க்கைக்காகவும், ஏற்பாடுகளுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள். நீங்கள் ஜெபித்து எங்களோடு நிற்கும்போது, இதைப்போன்ற கூட்டங்களையும் தாங்கி உதவலாம். மேலும் விவரங்களை இந்த இதழின் 14ம் பக்கத்தில் காணலாம்.

அன்பானவர்களே, இப்போது நீங்கள் கடந்துகொண்டிருக்கும் நிலையே உங்கள் வாழ்வின் இறுதி அல்ல. ஆண்டவர் ஏற்கனவே கிரியை செய்கிறார்; உருவாக்குகிறார்; சீர்ப்படுத்துகிறார்; உடைந்த துண்டுகளைக் கொண்டு நேர்த்தியான ஒன்றை ஆயத்தமாக்குகிறார். அவரது கரம் உங்கள்மேல் உள்ளது; உங்கள் வாழ்க்கையில் அவரது நோக்கம் மாறாததாகவே உள்ளது.

நீங்கள் விசுவாசத்தில் நிற்கும்போது, மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படி உங்கள் கரத்தை நீட்டுங்கள். ஆண்டவர் நிச்சயமாகவே உங்களை நினைப்பார்; தமது ஏற்ற வேளையில் உங்களை உயர்த்துவார். உங்கள் கரத்தின் பிரயாசத்தை அவர் நிலைப்படுத்தி, உங்கள் வாழ்க்கையை தம் சமாதானத்தினால் நிறைத்து, உங்கள் வாயிலாக தம் மகிமையை காணப்படும்படி செய்வார்.

ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் தேவ மகிமையை காணும்வரை நாம் இணைந்து ஒன்றாய் விசுவாசிப்போம்; ஜெபிப்போம்; ஸ்திரமாக நிற்போம்.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் சகோதரன்,

Dr. பால் தினகரன்.


## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

SCAN & PAY

SCAN & PAY INSTANTLY VIA UPI

UPI jesuscalls@indus

**BANK TRANSFER:**

| Bank | Beneficiary | A/c No. | IFSC |
| --- | --- | --- | --- |
| IndusInd | JESUS CALLS | 555444333222111 | INDB0000167 |
| ICICI | JESUS CALLS | 000901056144 | ICIC0000009 |

Please share your donation detail to us through Whatsapp to 98409 99923

Website: www.jesuscalls.org/donate

Jesus Calls Mobile app (available in Android & iOS)

EMO/CHEQUE /DD

- Write in favour of "JESUS CALLS"
- Can be sent by speed post to: Prayer Tower, 16, D.G.S. Dhinakaran Road, Chennai 600028.
- In person: At the prayer tower in your area

For donation related/partner plans/receipts related queries, please call or Whatsapp 98409 99923. For 24x7 Prayer support, please call 8546999000

# வீட்டுக்குள் தேவ சமாதானத்தை திரும்ப கொண்டு வாருங்கள்



# குடும்ப ஆசீர்வாத திட்டம்

### சங்கிலிகள் உடைந்தன; குடும்பம் மீண்டது

*என் கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். எங்கள் வீட்டில் வேதனையும் நம்பிக்கையின்மையும் காணப்பட்டது. மனமுடைந்த நிலையில் தேவனை நோக்கிக் கூப்பிட்டு, குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணைந்தேன். தேவன் என் ஜெபங்களுக்குப் பதில் கொடுத்தார். என் கணவர், குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்று, இரட்சிக்கப்பட்டார். எங்கள் குடும்பம் தேவ கிருபையினால் மீட்கப்பட்டது.*

*- ரேகா பிள்ளை, பூனா.*

சகோதரி ரேகாவைப்போல உங்கள் குடும்பத்திற்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்போது, ஆசீர்வாதங்கள் பின்தொடரும்.

உங்கள் குடும்பம் தத்தளிக்கிறதா? ஒருவரையொருவர் சரியாக புரிந்துகொள்ளவில்லையா? யாரும் காணாத மௌன யுத்தம் நடக்கிறதா? தேவன் அதைக் காண்கிறார்; உங்கள் குடும்பத்தைச் சீர்ப்படுத்த அவர் ஆயத்தமாக இருக்கிறார்.

### குடும்ப ஆசீர்வாத திட்டத்தில் இணையும்போது:

- தினசரி ஜெபம் - ஒரு ஜெப வீரர் தினமும் உங்கள் குடும்பத்துக்காக தேவனிடம் ஜெபிப்பார்.
- திருமண நாள் ஆசீர்வாத அழைப்பு - உங்கள் திருமண நாளின்போது தொலைபேசி மூலம் அழைத்து ஜெபிப்பார்கள்
- வாக்குத்தத்த சான்றிதழ் - உங்கள் நன்கொடை ரூ.5,000/-ஐ அடைந்ததும் வாக்குத்தத்தம் அடங்கிய சான்றிதழ் வழங்கப்படும்.

---

### உங்கள் குடும்பத்துக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்போது:

- தத்தளிப்பு மாறி சமாதானம் வரும்
- பிரிவினை மாறி ஒருமனம் உருவாகும்
- எல்லா தேவையையும் தேவ ஆசீர்வாதம் நிரப்பும்

---

**"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்" என்று வேதம் வாக்குக்கொடுத்தபடி உங்கள் குடும்பத்தில் சமாதானமும் பாதுகாப்பும் இளைப்பாறுதலும் விளங்கும் (ஏசாயா 32:18).**

இது திட்டம் என்பதைக் காட்டிலும் உங்கள் குடும்பத்துக்கு பாதுகாப்பு, சமாதானம், வேண்டியவை அருளப்படுவது குறித்த உடன்படிக்கையாகும்.

இன்றே இதில் இணைந்து தேவ சமாதானத்தின் பாதையில் பயணிக்க ஆரம்பித்திடுங்கள்.

◆ ரூ.300/- ◆ ரூ.500/- ◆ ரூ.1,000/- ◆ ரூ.5,000/-

இணைய தளம்: www.jesuscalls.org/donate/fbp



# இந்தக் கோடை விடுமுறையில் பெதஸ்தாவுக்கு வாருங்கள்; தேவனுடைய வல்லமையான அற்புதங்களை அனுபவியுங்கள்





மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் பெதஸ்தா ஜெப மையம் அமைந்துள்ளது. பல்வேறு தேசங்களிலிருந்து இதுவரை 1 கோடியே 23 லட்சம் பேர் இந்த மையத்திற்கு வருகை தந்துள்ளனர். பலர் கனத்த பாரத்துடனும், எதிர்காலத்தைக் குறித்த நிச்சயமின்றியும், வியாதியோடும், உறவுகளில் சிக்கலோடும், ஜெபத்திற்கு பதில் கிடைக்காத நிலையிலும் வந்து, தெளிவோடும், சமாதானத்தோடும், வாழ்க்கையை மாற்றிய அற்புதங்களோடும், தேவன் தங்கள் கூப்பிடுதலை கேட்டுள்ளார் என்ற நிச்சயத்தோடும் திரும்புகின்றனர்.

## பெதஸ்தா ஜெப மையத்தின் சிறப்பம்சங்கள்:

- 365 நாட்களும் திறந்திருக்கும் (காலை 6 முதல் இரவு 8:30 மணி வரை)
- தினசரி ஜெப சேவைகள் - அதிகாலை ஜெபம், மாலை துதி ஆராதனை, முன்னிரவு ஜெபம்
- வாராந்திர சிறப்பு ஆசீர்வாத கூட்டங்கள், சுகம், விடுதலையளிக்கும் ஆராதனைகள், UTurn கூட்டங்கள்
- பன்மொழி பிரார்த்தனை சேவைகள் - ஹிந்தி, தெலுங்கு, மலையாளம்
- சிறுவர்களுக்கான சிறப்பு ஆராதனைகள் (ஞாயிறுதோறும்) - சிறுபிள்ளைகளை விசுவாசத்தில் வளர்த்தல்

இந்தக் கூடுகைகள் வாயிலாக பலர் நீண்டகால வியாதிகள், அடிமைத்தனம், ஒடுக்குதல் இவற்றிலிருந்து விடுதலை பெற்றதாகவும், குடும்பங்கள் சீர்ப்பட்டதாகவும், வாழ்வின் முக்கிய தீர்மானங்களை எடுக்க வழிகாட்டுதல் கிடைத்ததாகவும் சாட்சியளிக்கின்றனர்.



### ஜெபத்தினால் மாறிய வாழ்க்கை

*நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த என் பெயர் சாம். எதிர்காலத்தைக் குறித்த குழப்பத்தோடு TNPSC தொகுதி 4 தேர்வுக்காக ஆயத்தப்பட்டேன். ஆனால், பயம் என்னைப் பிடித்தது. பெதஸ்தா ஜெப மையத்திற்கு வந்தேன். ஒரு ஜெப வீரர் எனக்காக ஜெபித்தார். தேவன் மீதுள்ள விசுவாசம் புதுப்பிக்கப்பட்டது. தினமும் ஜெப கோபுரத்தை தொடர்புகொண்டேன். தேவனுடைய கிருபையால் முதல் முயற்சியிலே எனக்கு அரசு வேலை கிடைத்தது. நான் விரும்பிய இடத்திலேயே பணியமர்த்தப்பட்டேன். பெதஸ்தா ஜெப கோபுரத்தின் ஜெப உதவிக்கு நன்றி செலுத்துகிறேன்.*

**ஆண்டுதோறும் இதேபோல் ஆயிரக்கணக்கான சாட்சிகள் பதிவாகின்றன.**
**இதுவே பெதஸ்தாவின் இதய துடிப்பாகும்.**

## நீங்களும் வந்து அற்புதத்தை அனுபவியுங்கள்!

பசுமையான, ஜெபத்திற்கு முக்கியமான சூழ்நிலையை அனுபவிக்க வாருங்கள். கவனச்சிதறலின்றி அமைதியாய் தேவனை தேடும்படி எல்லா இடமும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### பெதஸ்தாவின் சிறப்பம்சங்கள்

- ஐந்து மண்டபங்களுடன்கூடிய பெதஸ்தா குளம்
- ஜெப ஆலோசனை அறைகள்
- இயேசுவின் சிலுவை மரண காட்சிகள்
- சிறுபிள்ளைகளுக்கான பூங்கா
- தரிசன மையம்
- தங்கும் வசதி
- இயேசுவின் அழகிய ஓவியங்கள், வளைவு ஜன்னல்கள், கம்பீரமான வெள்ளைச் சிலுவை அமைந்த தியான அறை





**மே மாத சிறப்பு நிகழ்ச்சிகள்**
(01.05.2026 - 31.05.2026).
தினமும் இரவு 8 முதல் 9 மணி வரை
நடனம், இசை, நாடகம், கலை
மற்றும் பல்வேறு தாலந்து
களைக் கொண்ட பெதஸ்தா
கலை விழா நடைபெறும்.
**அனைவருக்கும் அனுமதி இலவசம்**

**உங்கள் வசதிக்கென உணவகங்கள்**

**அருகிலுள்ள சுற்றுலா தலங்கள்**
**கோவை குற்றாலம் (6 கி.மீ.)**
**கோவை கொண்டாட்டம் (15 கி.மீ.)**

தங்குவதற்கான பொது அரங்கு : 94878 46545
விருந்தினர் இல்லம்: 0422-2614790 / 94878 96566
மின்னஞ்சல்: bobethesda@jesuscalls.org
இணையதளம்:
www.jesuscalls.org/bethesda

### நம்பிக்கையளிக்க வகையாய் இணைப்போம் - பெதஸ்தா, இப்போது வளரவேண்டிய அவசியம் என்ன?

வருகிறவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரிக்கிறது. பலர் நீண்ட தொலைவு பயணம் செய்துவந்து, தனி ஜெபத்திற்காக பொறுமையோடு காத்திருக்கிறார்கள். குறைவான நபர்களே தங்குவதற்கு வசதி இருப்பதால், சிலரால் தங்க இயலவில்லை. தேவனோடு அமைதியாய் நேரம் செலவிட இயலாமல் சிலர் கஷ்டப்படுகின்றனர்.

ஆண்டவரால் வழிநடத்தப்படுகிறபடி பெதஸ்தா ஜெப நகரத்தை உருவாக்கவேண்டிய தேவை இருக்கிறது. வருகிற அனைவரும் தாமதமின்றி ஜெப உதவி பெற்று, தேவனோடு அர்த்தமுள்ள நேரத்தை செலவிட இது உதவும்.

- 3,000 பேர் அமர்ந்து தனி ஜெபத்தில் நேரம் செலவிடும்படி தியான அறை விரிவாக்கப்படும்
- ஜெப கோபுரத்திற்கு புதிதாக உயரமான ஒரு கோபுரம் அமைக்கப்படும். நேரடியாகவும் தொலைபேசி வாயிலாகவும் அனைவருடைய ஜெப விண்ணப்பங்களும் முறையாக பெறப்பட்டு ஆலோசனை வழங்கப்படும்.
- குடும்பங்களும் தனி நபர்களும் நீண்டகாலம் தங்கி தேவனை தேடுவதற்கு வசதியாக 2,000 பேருக்கு பொது அரங்கு (dormitory) விரிவாக்கப்படும்.

வருகிற அனைவரும் ஜெபத்தை பெறாமல் திரும்பக்கூடாது என்பதற்காக, தேவைகள் வளருவதற்கேற்ப இந்த மேம்பாடுகள் செய்யப்படவேண்டும்.

**தேவன் கட்டுவதில் நீங்களும் பங்குபெறுங்கள்.**
**பெதஸ்தா ஜெப மையத்தை மேம்படுத்துவதில்**

☐ ரூ.10,000 ☐ ரூ.1,00,000 ☐ ரூ.2,00,000 கொடுத்து அல்லது பரிசுத்த ஆவியானவர் உங்கள் இருதயத்தை ஏவுகிறபடி உதவலாம்.

### பெதஸ்தா ஜெப மையத்தில் [கோயம்புத்தூர்] தன்னார்வ சேவை செய்ய வாய்ப்பு

காருண்யா நகரில் அமைந்துள்ள பெதஸ்தா ஜெப மையத்திற்கு வருகிறவர்களுக்காக ஜெபிக்க தன்னார்வ ஜெப வீரர்கள் தேவை.
தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி மொழிகளில் ஜெபிக்கக்கூடியவர்கள் தேவை.
தங்கும் வசதி வழங்கப்படும் விவரங்களுக்கு: +91 6380 752 344
மின்னஞ்சல்: bobethesda@jesuscalls.org

வாலிபர் பகுதி



# நியாயம் செய்!

அன்பானவர்களே, தேவன் உங்கள் வாழ்வைக் குறித்து நேர்த்தியான, காரியத்துடன் கூடிய திட்டங்களை வைத்திருக்கிறார் என்பதை உங்களுக்கு நினைவுப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். "**அவர் உம்முடைய ஜனங்களை நீதியோடும், உம்முடைய ஏழைகளை நியாயத்தோடும் விசாரிப்பார்**" (சங்கீதம் 72:2) என்பதே இம்மாதத்திற்கான வாக்குத்தத்தமாகும். இந்த வசனம், நீதியோடும் நியாயத்தோடும்கூடிய தலைமைத்துவத்தை தேவன் விரும்புகிறார் என்பதைக் காட்டுகிறது.

பெரிதானதோ, சிறிதானதோ எவ்விதத்திலாகிலும், தேவன் தம் ஜனங்களுக்கு தலைமைத்துவத்தை அளிக்கிறார். நீங்கள் இப்போதே அப்படிப்பட்ட பொறுப்பில் இருக்கலாம் அல்லது தேவன் உங்களுக்காக ஒன்றை ஆயத்தம் செய்துகொண்டிருக்கலாம். தலைமைத்துவம் என்பது வெறுமனே ஒரு வேலையல்ல. அது தேவனால் அளிக்கப்படும் ஒரு பொறுப்பாகும். அது நேர்மையோடும் உண்மையோடும் செயல்படுத்தப்படவேண்டும்.

சாலொமோனை எடுத்துக்காட்டாகக் காண்போம். அவன் ராஜாவானதும் ஐசுவரியத்தையோ, அதிகாரத்தையோ கேட்கவில்லை. மாறாக, தாழ்மையுடன், "கர்த்தாவே, நான் என் ஜனங்களை ஆளுகை செய்யவேண்டும். சரியானதற்கும் தவறானதற்கும் வேறுபாடு காணும்படி ஞானமும் விவேகமுமுள்ள இருதயத்தை எனக்குத் தந்தருளும்" என்று வேண்டினான். அந்த வேண்டுதல் தேவனுக்குப் பிரியமாயிருந்தது. அவர், சாலொமோனுக்கு அளவற்ற ஞானத்தைக் கொடுத்தார். அதனால், சாலொமோனின் ஆளுகை நியாயமும் தெய்வீக தயவும் நிரம்பியதாக இருந்தது.



மெய்யான தலைமைத்துவம், கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தில் வேரூன்றியதாக உள்ளது. இளவயதிலேயே தேவன் நமக்குப் பொறுப்பை அளிக்கும்போது, அதை உண்மையாக செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். நாம் விருப்புவெறுப்பின்றி தலைமையேற்று நடத்தி, எல்லோரையும் நேர்மையாக பாவித்து, அவரைக் கனம்பண்ணும் முடிவுகளை எடுக்கவேண்டும்.

என் பள்ளி நாட்களில் முதன்முதலில் வகுப்புத் தலைவனாக நியமிக்கப்பட்டது எனக்கு நினைவு வருகிறது. என் ஆசிரியர் எனக்கு அதற்கான அடையாள அட்டையை (badge) அளித்து, "இனி நீ மாணவன் மட்டுமல்ல; நீ ஒரு தலைவன். உன் நண்பர்கள், உன்னை விரோதிப்பவர்கள், வகுப்பிலிருக்கிறவர்கள் அனைவரிடமும் நேர்மையாக நடந்துகொள்வாய் என்று நம்புகிறேன். ஒழுக்கத்துடனும், நேர்மையுடனும், பொறுப்புடனும் தலைமையேற்று நடத்து" என்று கூறினார்கள். அந்த வார்த்தைகள் தலைமைத்துவத்தைக் குறித்த புரிதலை எனக்குள் உருவாக்கின. அது அதிகாரத்தைப் பற்றியது மட்டுமல்ல; பொறுப்புணர்வுக்கும் நம்பிக்கைக்கும் உரியதுமாகும்.

சாமுவேல் தினகரன்
samuel@jesuscalls.org SAMUELDHINAKARAN

தலைமைத்துவம், செல்வாக்கினை கொண்டதாகும். நாம் தலைமையேற்று நடத்தும் விதம், மற்றவர்களின் வாழ்க்கையையும் பாதிக்கிறது. தலைவர்கள் அநியாய மாக செயல்பட்டால், மக்கள் அதைரியப்படுவர் அல்லது ஒடுக்கப்படுவர். ஆனால், தலைமைத்துவம், நீதியில் வேர்கொண்டதாக இருந்தால், அது வளர்ச்சியையும், சமாதானத்தையும், ஒழுங்கையும் அளிக்கும். ஆகவே தான், நியாயம் தெரிந்துகொள்ள வேண்டியதல்ல; அது, அவசியமானதாகும்.

தலைமைத்துவம் சரியில்லாமல் போகும்போது வேதனையானவை நிகழ்வதையும் நாம் கண்டிருக்கி றோம். சமீப ஆண்டுகளில் சாத்தான்குளத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம், அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவதன் பின்விளைவுகளை வெளிக்காட்டியது. கடை ஒன்றை நடத்திக்கொண்டிருந்த தகப்பனும் மகனும் கோவிட் காலத்தில் கடையை பூட்ட சில நிமிடங்கள் தாமதமாகியுள் ளது. அவர்கள் கடையைத் திறந்து வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்ததைக் கண்ட காவல்துறையினர் அவர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று இரக்கமில்லாமல் அடித்துள்ளனர். தகப்பனையும் மகனையும் ஆடைகளைக் களைந்து கடுமையான தாக்கியுள்ளனர். அவர்களது அபல குரல் சுற்றியிருந்த அனைவருக்கும் கேட்டுள்ளது. அவர்களால் பொறுக்க இயலாத நிலை. காவல் நிலையத்தில் அவர்களை அடைத் திருந்த அறையில் இரத்தக் கறைகள் படிந்தன. காண சகிக்கக்கூடாத காட்சியாக அது இருந்தது. அந்தக் கொடு மையால் இருவரும் உயிரிழந்தனர். குற்றஞ்சாட்டப்பட்ட காவல்துறையினருக்கு எதிரான தீர்ப்பு சமீபத்தில்தான் நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது. நீதிமன்றம் இதை மிக அதிக அதிகார துர்ப்பயன்பாடு என்று கூறி, இருவரையும் கொலை செய்த காவல் துறையைச் சேர்ந்த ஒன்பது பேருக்கும் மரண தண்டனை விதித்தது.

இதுபோன்ற சம்பவங்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்துவது எவ்வளவு ஆபத்தானது என்பதை நமக்கு நினைவுப்படுத்துகின்றன. அதிகாரம், ஒருபோதும் ஒடுக்குவதற்கும், முரட்டாட்டத்திற்குமான கருவியாகக் கூடாது. குற்றச்சாட்டோ, சூழ்நிலையோ ஒருபோதும் இன்னொருவரை தவறாக நடத்துவதற்கான உரிமையை அளிப்பதில்லை. இதற்காகவே தேவன், நியாயத்தை வலியுறுத்துகிறார். தலைவர் ஒருவர் நீதியான, மனதுருக்கமான, நேர்மையான இயல்பை கொண்டிருக்க வேண்டும்.

தேவ மக்களாகிய நாம் அவரது கரங்களில் தலைவர் களாக இருக்கும்படியே அழைக்கப்பட்டிருக்கிறோம். தனிப்பட்ட வெறுப்பை, தயவை, முன்முடிவை தள்ளி வைக்கவேண்டுமென்பதே இதன் பொருளாகும். மற்ற வர்களை தவறாக நடத்துகிறவர்களுக்கு நாம் ஒருபோதும் தயவு செய்யக்கூடாது. மாறாக, சாலொமோனைப்போல, தொடர்ந்து தேவ வழிகாட்டுதலை நாடவேண்டும்; சரியா னவற்றை செய்வதற்கான ஞானத்தைக் கேட்கவேண்டும்.

நாம் வழிநடத்தும் மக்கள் தேவனுக்குச் சொந்தமான வர்கள் என்பதை மறந்துபோகக்கூடாது. அவர் கொடுத்த வற்றை செய்யும் பணியாளர்களாக மாத்திரமே நாம் இருக்கிறோம். தனிப்பட்ட தத்தளிப்புகள், உணர்ச்சிகள் அல்லது முன்னுரிமை ஒருபோதும் நம் முடிவுகளை நடத்தக்கூடாது. நாம் நேர்மையுடன் வழிநடத்தும்போது, தேவன் அதில் பிரியமாயிருப்பார்.

**ஜெபம்:** அன்புள்ள ஆண்டவரே, என்னை சுற்றிலும் இருப்பவர்களை நான் உயர்த்தும்படி, என்னை வாழ்வில் உயர்த்துவதற்கு நீர் விரும்புகிறதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். இருதயத்தில் தாழ்மையுடன் நான் உம்மிடம் வருகிறேன். நீர் எனக்காக நியமித்துள்ள இடத்தில் என்னை அமர்த்துவதற்கு ஒப்புக்கொடுக்கிறேன். உம் பார்வைக்கு ஏற்ற காரியங்களைச் செய்வதற்கு எனக்குக் கற்பித்தருளும். பக்தியான தீர்மானங்களை எடுத்து, நீதியாய் வழிநடத்துவதற்கேற்ற ஞானத்தை எனக்கு அருளிச்செய்யும். என் தலைமைத்துவம் என்னை சுற்றிலுமிருக்கிறவர்களுக்கு ஆசீர்வாதத்தை அளிக்கட்டும். என் பராமரிப்பில் இருப்பவர்கள் சமாதா னத்தை, வளர்ச்சியை, சந்தோஷத்தை அனுபவிப்பார்க ளாக. நீதியோடும் மனதுருக்கத்தோடும் வழிநடத்துவதற்கு பரிசுத்த ஆவியானவர் எனக்கு உதவுவாராக. பக்கச்சார்பு, பெருமை இவற்றிலிருந்து என்னை விடுவித்தருளும். கர்த்தருக்குப் பயப்படும் பயத்தால் என்னை நிரப்பும். என் வாழ்க்கை வெளிச்சமாக பிரகாசிக்கட்டும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.

**தேவன்தாமே உங்களை நீதியும் உண்மையுமுள்ள தலைவராக எழுப்புவாராக.**
**தேவ ஞானத்தில் நடந்து, அவர் உங்களை அமர்த்துகிற இடத்தில் ஆசீர்வாதமாக விளங்குவீர்களாக.**




இந்தியா முழுவதும் எல்லா
ஜெப கோபுரங்களிலும்
**6 நாட்கள் நடைபெறும்**

இசை | பாடல் | நடனம் | மைம்
கிராஃப்ட் | வண்ணம் தீட்டுதல் | விளையாட்டுகள்

**6 முதல் 12 வயது பிள்ளைகளுக்கு**





இந்தக் கோடை விடுமுறையை
மறக்க முடியாததாக்கிக் கொள்ள
**உங்கள் பிள்ளைகளை அனுப்புங்கள்**







**அனுமதி இலவசம்!**

**2026**

# டைனமிக் கிட்ஸ் கேம்ப்



**மே 2026**

## விவரங்கள்:

**இடம்:** உங்கள் பகுதியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம்

**காலம்:** 6 நாட்கள்

செம்பொருள்:
முத்திரை மோதிரம்
2026




பங்கேற்பது மற்றும் தன்னார்வ ஊழியம் செய்வது குறித்த மேலும் விவரங்களை அறிந்துகொள்ள தொடர்புகொள்ளுங்கள்

உங்கள் பகுதி ஜெப கோபுரம்
இணையதளம்: www.jesuscalls.org/dkc
மின்னஞ்சல்: dkc@jesuscalls.org

**டைனமிக் சிறுவர் முகாமில் பங்குபெற்றதால் ஒரு சகோதரி பெற்ற ஆசீர்வாதம்:**

நான் பிம்ப்ரியில் உள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் டைனமிக் சிறுவர் முகாமில் கலந்துகொண்டேன். ஆசிரியர்கள் என்னை அன்புடன் வரவேற்று தேவனின் கரங்களில் கனத்துக்குரிய பாத்திரமாக விளங்குவது குறித்து அநேக கதைகளை கற்பித்தார்கள். நான் தினமும் புதிய பாடல்களையும் நற்காரியங்களையும் கற்றுக்கொண்டேன். ஒவ்வொரு தருணத்தையும் மகிழ்ச்சியாய் அனுபவித்தேன். இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு நன்றி.
- வர்ஷாலி பௌடி, பிம்ப்ரி.

இந்தக் கோடைக்காலத்தில் காணிக்கை அனுப்பி, டைனமிக் கிட்ஸ் கேம்ப் ஊழியத்தில் பங்காளராகி 20,000 பிள்ளைகள் வாழ்வில் நன்மையான மாற்றத்தை உண்டாக்கலாம்.

பெயர்: ..............................................................................................................

பங்காளர் எண்: ...................................................... பிறந்த தேதி: ..................................................

முகவரி: ..........................................................................................................

..........................................................................................................................

மொபைல்: ................................................... இமெயில்: ...................................................

- ஒரு பிள்ளைக்கு ரூ.300/-
- இரண்டு பிள்ளைகளுக்கு ரூ.600/-
- நான் ................ பிள்ளைகளுக்காக ரூ.............. அனுப்புகிறேன்.

**உங்கள் காணிக்கைகளை டைனமிக் சிறுவர் முகாமுக்கு கொடுப்பதின் வாயிலாக 20,000 சிறுபிள்ளைகளை சந்திக்க உதவலாம்**

Scan QR Code

சிறுவர் பகுதி



# ஜிம் & ஜெமி

## மனம் சோர்ந்துபோகாதிருங்கள்
















**கதையின் நீதி:** ஒருபோதும் சோர்ந்துபோகக்கூடாது - நம்பிக்கையும் பொறுமையும் தோல்வியை வெற்றியாக மாற்றும்.

மனப்பாட வசனம்:

**"கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக"** (1 பேதுரு 5:10)



# கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்!

**"நான் சிறுமையும், எளிமையுமானவன், கர்த்தரோ என்மேல் நினைவாயிருக்கிறார்; தேவரீர் என் துணையும் என்னை விடுவிக்கிறவரு மாயிருக்கிறீர்!..."** (சங்கீதம் 40:17) என்று வேதம் சொல்கிறது.

இவ்வாறாக கர்த்தருடைய துணையையும், அவர் அருளும் ஆசீர்வாதமாகிய விடுதலையையும் பெற்று, தேவ பிரசன்னத்தினால் எப்பொழுதும் நிறைந்து வாழும் தெய்வீக வாழ்வை நமக்கு அருளும்படிக்கே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, "இரட்சகராகவும், நமக்கு இரட்சிப்பை அருளுபவராகவும்" இவ்வுலகில் வெளிப்பட்டார் (1 தீமோத்தேயு 2:4).

ஆண்டவராகிய இயேசுவும்கூட, மத்தேயு சுவிசேஷம் 18:14-ல், "...இந்த சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப் போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" என்றே கூறியிருக்கிறார். இவ்விதமாக நாம் இருளில் "கேட்டின் மக்களாக" வாழாமல், "வெளிச்சத்தின் பிள்ளைகளாக" (1 தெசலோனிக்கேயர் 5:5) வாழும்படி, "தேவன் நம்மை எப்பொழுதும் நினைக்கிறவராக" எவ்வாறு வழிநடத்துகிறார் என்பதை பார்ப்போம்.

### சமாதானத்துக்கேதுவான நினைவுகள்



**"நான் உங்கள்பேரில் நினைத்திருக்கும் நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக்கல்ல; சமாதானத்துக்கேதுவானவைகளே!"** (எரேமியா 29:11)

நாம் வாழ்கிற இந்த உலகமானது, பொல்லாங்கனாகிய பிசாசுக்குள் கிடக்கிறது என்று நாம் அறிந்திருக்கிறோம் (கலாத்தியர் 1:4; 1 யோவான் 5:18). மேலும், பொல்லாத பிசாசானவன், "எவனை விழுங்கலாமோ? என்று வகைத்தேடி சுற்றித்திரிகிறான்" என்றும் வேதம் கூறுகிறது (1 பேதுரு 5:8).

ஆதியிலே தேவன் முதன்முதலாக சிருஷ்டித்த ஆதி மனுஷராகிய ஆதாமும் ஏவாளும், தேவன் சிருஷ்டித்திருந்த அருமையான தோட்டத்திலே, தேவனுடைய தெய்வீகப் பிரசன்னத்தை உணர்ந்தவர்களாக, அவரோடு இணைந்து வாழும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள் (ஆதியாகமம் 3:8). பகலின் குளிர்ச்சியான வேளையிலே, தோட்டத்தில் உலாவுகிற தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் ஆழமான தெய்வீக வாழ்வை அவர்கள் பெற்றிருந்தார்கள். அப்படிப்பட்ட தெய்வீக மக்களாக வாழ்ந்து வந்த அவர்களுடைய உள்ளத்தை, பிசாசானவன் "இச்சை" என்னும் இருளினால் நிரப்பி, அந்த தெய்வீக வாழ்வையே அவர்கள் முற்றிலுமாக இழந்துபோகும்படி செய்தான். இதைத்தான் நாம் வேதத்தில், "சத்துரு நம்மை இருளில் இருக்கப் பண்ணுகிறான்" என்று வாசிக்கிறோம் (சங்கீதம் 143:3). ஆனால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, "உலகத்திலே வந்து, எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாக" (யோவான் 1:9), இவ்வுலகிற்கு இரட்சகராகவும், மீட்பராகவும், நம்மை வழிநடத்தி செல்லும் வல்லமை நிறைந்த மேய்ப்பராகவும் விளங்குவதோடுகூட, அத்தகைய தமக்கு

ஸ்டெல்லா தினகரன் | stella@jesuscalls.org

சொந்தமான தம் ஜனத்தின்மீது எப்பொழுதும் நினைவாயிருக்கிற தெய்வீக அன்பினால் நிறைந்தவராயும் விளங்குகிறார். இது நமக்கு எவ்வளவு பெரிய பாக்கியம் நிறைந்த வாழ்வு என்பதை எண்ணிப் பாருங்கள்!

ஏறக்குறைய 16 வயது நிரம்பிய ஒரு வாலிபப் பெண், இவ்வுலகத்தின் ஆசை இச்சைகளினால் நிறைந்த உள்ளம் கொண்டிருந்தாள். இதினிமித்தம் அவள், கர்த்தரை பயபக்தியோடு தேடுவதை மிகவும் அற்பமாக எண்ணினாள். ஆனால், ''நமது நினைவுகளையெல்லாம் தூரத்திலிருந்து அறிகிற கர்த்தர்'' (சங்கீதம் 139:2-ன் பிற்பகுதி), அவளது இருதயத்தின் லௌகீக நினைவுகளையெல்லாம் அறிந்தவராக, அவள்மீது இரக்கம் கொண்டு, தெய்வீக அன்பினால் நிறைந்தவராக அவளோடு பேசினார். அவருடைய சத்தத்தையும், அதில் நிறைந்திருந்த அளவற்ற அன்பின் மேன்மையையும் உணர்ந்த அவள், உடனடியாக தன்னுடைய பாவ நிலைமையை உணர்ந்தவளாய், அவருக்கு முன்பாக தன்னையே முழுவதுமாக கண்ணீரோடு அர்ப்பணித்தாள். அன்று முதல் கர்த்தர் அவளோடு கூடவேயிருந்து, தாவீதுக்கு நல்ல மேய்ப்பராக இருந்து முடிவு பரியந்தம் அவனை ஆசீர்வாதமாக வழிநடத்தியதுபோன்று, அந்த வாலிப மகளையும் பொறுப்பெடுத்து, அவளது முதிர் வயதிலும் கனி தந்து, புஷ்டியும், பசுமையுமான தெய்வீக வழிகளில் கரம்பிடித்து நடத்தி அவளை ஆசீர்வதித்தார். அவளது குடும்பம் முழுவதுக்கும் மாத்திரமல்ல, அநேகம் ஆயிரம் ஆயிரமானோருக்கும் அவள் ஆசீர்வாதமான பாத்திரமாக விளங்க கர்த்தர் கிருபை செய்தார். ஆம்! அத்தகைய தெய்வீக ஆசீர்வாதம் பெற்ற பெண் நானே தான். தேவ கிருபை, அவருடைய வழி நடத்துதல் அன்று முதல் இன்றுவரை என்மீது நினைவாயிருந்து ஆச்சரியமாக வழிநடத்துகிறது.

**கர்த்தர்**
**தம் ஜனத்தின்மீது**
**எப்பொழுதும்**
**நினைவாயிருக்கிறார்**

### கர்த்தர் நம் இருதயத்தின் நினைவுகளை நிறைவேற்றுகிறார்

(எரேமியா 23:20)

தேவ மனுஷனாகிய தாவீது, தன் குமாரனாகிய சாலொமோனிடம், ''என் குமாரனே,...கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் அறிகிறார். நீ அவரை தேடினால் உனக்கு தென்படுவார்; நீ அவரை விட்டு விட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்'' (1 நாளாகமம் 28:9) என்று கூறினான்.

ஆம் பிரியமானவர்களே! நம் கர்த்தர் தெய்வம்; அவர் சகலத்தையும் ஆராய்ந்து அறிபவர்! உங்கள் உள்ளத்தின் நினைவுகளையெல்லாம் அவர் அறிவார். ''மனுஷனின் நினைவுகளின் தோற்றங்கள் எல்லாம் நித்தமும் பொல்லாததே என்பதை கர்த்தர் அறிவார்'' என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம் (ஆதியாகமம் 6:5). தேவனுக்கு ஆலயம் கட்டும்படி தாவீது வாஞ்சை கொண்டிருந்தான். ஆனால், அவனுடைய வாழ்வில் அதை நிறைவேற்றாவிடினும், அதை நிறைவேற்றும் பாக்கியத்தை கர்த்தர் அவனுடைய மகன் சாலொமோனுக்கு அருளி, அவனை ஆசீர்வதித்து வழிநடத்தினார்.

''கர்த்தர் நன்மையானதைத் தருவார்'' (சங்கீதம் 85:12). நம் அன்பு சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்களுக்கு, ஜெப வேளையில் ஆண்டவர் தரிசனமாகி, ஏழை மாணவர்களுக்கெல்லாம் உதவி செய்யக்கூடிய, கல்வி ஞானம் அருளும் கல்லூரி ஒன்றை ஸ்தாபிக்க தேவன் சித்தம் கொண்டார். அதை அவரே தம் மகனுக்கு வெளிப்படுத்தினார். அதை ஸ்தாபிப்பதற்கான பண வசதி கொஞ்சமும் இல்லாத வெறுமையான நிலைமை தான் அன்றைக்கு இருந்தது. ஆரம்பத்திலேயே, எங்கள் ஒரே மகளை கார் விபத்தில் பறிகொடுத்த கண்ணீர் நிறைந்த பரிதாப நிலை! இருப்பினும், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க தன்னை முழுவதுமாக அர்ப்பணித்த தம் ஊழியருக்கு, அதை நிறைவேற்றும்படியாக கர்த்தரே அவரை நினைத்தருளினார். அவ்வாறு நிறைவேற்றப்பட்டதுதான், ''காருண்யா கல்வி ஸ்தாபனம்''. இது நம்முடைய கண்களுக்கு இன்று எவ்வளவு ஆச்சரியமானதாக விளங்குகிறது.

அருமையான தேவனுடைய பிள்ளைகளே! உங்கள் வாழ்விலும்கூட கர்த்தருக்கு பிரியமான

## கர்த்தரை பயபக்தியோடு தேடி, அவரால் நினைவுகூரப்பட்டு, சம்பூரண ஆசீர்வாதங்களால் நிரம்புங்கள்

வழிகளில் நீங்கள் பயபக்தியோடு நடப்பீர்களேயானால், உங்கள் வாழ்விலும் அவ்வாறே உங்கள் இருதயத்தின் நினைவுகளையெல்லாம் கர்த்தரே நிறைவேற்றி முடிப்பார். ''அவர் சொல்ல ஆகும்; அவர் கட்டளையிட நிற்கும்'' (சங்கீதம் 33:9) என்று வேதத்திலும் நாம் வாசிக்கிறோமல்லவா?.

ஆகவே, பிரியமானவர்களே! வேதம் சொல்லுகிறபடியே, நீங்கள் விரும்புகிறதற்கும் வேண்டுகிறதற்கும், ஏன், உங்கள் மனதில் நினைப்பதற்கும் மேலாக கர்த்தர் உங்கள் வாழ்வில் காரியங்களை நிறைவேற்றுவார் என்பதை மறவாமல் அவரை உறுதியாக பற்றிக்கொள்வீர்களாக!

### தலைமுறை தலைமுறையாக நிற்கும் நினைவுகள்

**''கர்த்தருடைய ஆலோசனை நித்திய காலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும்''** (சங்கீதம் 33:11)

ஆபிரகாமை தமக்கென்று சொந்தமாகத் தெரிந்துகொண்ட தேவன், மத்தேயு முதலாம் அதிகாரம், 1 முதல் 17 வசனங்கள் வரை வாசித்துப்பார்ப்பீர்களானால், தொடர்ந்து பல தலை முறைகளாக அவரை வழிநடத்தி வந்த விதத்தை அறிந்துகொள்வீர்கள். 1 தெச. 5:24-ல் நாம் வாசிப்பதுபோன்று, ''அவர் தமது அழைப்பில் உண்மையுள்ளவராக முடிவுபரியந்தம், அப்படிப்பட்டவர்களோடு கூடவேயிருந்து, கரம்பிடித்து கைவிடாமல் வழிநடத்துவார்'' என்ற சத்தியத்தை அறிந்துகொள்கிறோம்.

பிரியமானவர்களே! ஆபிரகாம் முடிவுபரியந்தம் கர்த்தரை விசுவாசிக்கும் விசுவாசத்தில் உறுதியாக தரித்திருந்தான்! அவ்வாறே யோபுவைப் பாருங்கள், அவனது வாழ்வில் எவ்வளவு பயங்கரமான இழப்புகள்! தாழ்த்தப்பட்ட தனிமை நிலைமை! ஆயினும், அவன் தன் தேவனாகிய கர்த்தர் மீது வைத்திருந்த விசுவாசம், நம்பிக்கை எப்படிப்பட்டதாயிருந்தது?

**''அவர் என்னை கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும், என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்''** (யோபு 13:15)

**''ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னை சோதித்தப்பின் நான் பொன்னாக விளங்குவேன்''** (யோபு 23:10)

முடிவிலே கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட வார்த்தைகளின் படியே கீழ்ப்படிந்து நடந்து, யோபு 42:2-ன்படி, ''தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்'' என்று தன் விசுவாசத்தை அறிக்கையிட்டதினிமித்தம், யோபு 42:10-ல் நாம் வாசிப்பது போன்று, கர்த்தர் அவனுடைய வாழ்வின் ''சிறையிருப்பை'' நீக்கி, முதலில் இருந்த எல்லாவிதமான ஆசீர்வாதங்களைப் பார்க்கிலும், இரண்டத்தனையான ஆசீர்வாதங்களை அவனுக்கு அருளி, எவ்வளவாய் அவனை சிநேகித்தார் பாருங்கள்!

அருமையானவர்களே! உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் உறுதிப்பட்டதாக, நிலையானதாக, உண்மையுள்ளதாக இருக்கிறதா? அல்லது மிகவும் எளிதில் சோர்வுக்கு இடம் கொடுத்து மனம் கலங்கி வேதனைக்குட்பட்டிருக்கிறீர்களா? தேவ மனிதர்களாகிய ஆபிரகாம், தாவீது, தானியேல் போன்ற பக்தர்களைப்போல நீங்களும் கர்த்தரை உறுதியாகப் பற்றிக்கொண்டு, அவர்மீதே உங்கள் முழு நம்பிக்கையையும் வைத்து, அதினிமித்தம் பூரண ஆசீர்வாதம், சமாதானம் நிறைந்த வாழ்வினை பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறீர்களா? வேதாகம பக்தர்களைப்போன்று பரம்பரை பரம்பரையாக கர்த்தரால் நினைவுகூரப்பட்டவர்களாக, தெய்வீக ஆசீர்வாதங்களால் நிறையப்பட இப்பொழுதே உங்களை அர்ப்பணியுங்கள்.

எங்கள் குடும்பத்தையும்கூட சகோதரர் தினகரன் முதல், குடும்பத்தில் ஒவ்வொருவரையும் கர்த்தர் நினைவுகூர்ந்து, தமக்கு சொந்தமானவர்களாக மாற்றி, அவருடைய தெய்வீக சித்தத்தை நிறைவேற்றும் வழிகளில், பரிசுத்த ஆவியானவரின் துணையோடுகூட அற்புதமாய் நடத்தி வருகிறார். அவ்வாறே நீங்களும் கர்த்தரை பயபக்தியோடு தேடி, அவரால் நினைவு கூரப்பட்டு, சம்பூரண ஆசீர்வாதங்களால் நிரம்பிய தெய்வீக வாழ்வை பெறுவீர்களாக!

# மே 2026 இன்றைய இறை தியானம்

**1** **சங்கீதம் 102:15 - கர்த்தர் மகிமையில் வெளிப்படுவார்**
**தியானத்திற்கு:** யோவான் 12:28; அப். 7:55,56; 2 கொரி. 4:6

**2** **சகரியா 10:12 - கர்த்தர் உங்களை பலப்படுத்துவார்**
**தியானத்திற்கு:** யோபு 4:4; 1 தீமோ. 1:12; 2 தீமோ. 4:17

**3** **நீதிமொழிகள் 8:17 - கர்த்தர் நம் சிநேகிதர்**
**தியானத்திற்கு:** ஏசாயா 43:4; எரே. 31:3; யோவான் 15:15

**4** **எபிரெயர் 7:25 - இரட்சிக்க வல்லமையுள்ள தேவன்**
**தியானத்திற்கு:** சங். 20:6; ஏசாயா 63:1; செப். 3:17

**5** **ஏசாயா 27:6 - பலனால் நிரம்புவீர்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 26:12; உபா. 28:4; ரூத் 2:12

**6** **2 நாளாகமம் 7:16 - நம்மை காண்கிற தேவன்**
**தியானத்திற்கு:** யோபு 36:7; சங். 34:15; எசே. 36:9,10

**7** **நீதிமொழிகள் 20:7 - உங்கள் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:17; சங். 144:12; ஏசாயா 54:13

**8** **ஏசாயா 26:12 - கர்த்தர் சமாதானம் தருகிறவர்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 12:18; யோவான் 14:27; 2 தெச. 3:16

**9** **எரேமியா 20:11 - கர்த்தர் நம்மோடிருக்கிறார்**
**தியானத்திற்கு:** ஆதி. 28:15; உபா. 31:8; 1 நாளா. 28:20

**10** **ஏசாயா 35:10 - சந்தோஷம், மகிழ்ச்சி**
**தியானத்திற்கு:** ஏசாயா 51:3; எரே. 15:16; லூக்கா 1:14

**11** **யோவான் 14:12 - கர்த்தருடைய கிரியை**
**தியானத்திற்கு:** 1 கொரி. 15:58; யாக். 1:4; வெளி. 3:8

**12** **எபேசியர் 3:20 - நமக்குள்ளே கிரியைசெய்கிற கர்த்தர்**
**தியானத்திற்கு:** சங். 107:24; ஏசாயா 63:7; 1 கொரி. 16:10

**13** **லூக்கா 8:50 - விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்**
**தியானத்திற்கு:** மத். 21:21,22; மாற்கு 11:22,23; யோவான் 11:45

**14** **ஏசாயா 51:11 - நித்திய மகிழ்ச்சி**
**தியானத்திற்கு:** சங். 119:111; ஏசாயா 61:7; ஆபகூக் 3:18

**15** **மத்தேயு 28:18 - அதிகாரம்**
**தியானத்திற்கு:** யாத். 18:25; ஏசாயா 22:21; வெளி 2:26

**16** **ரோமர் 5:1 - விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறீர்கள்**
**தியானத்திற்கு:** ஆபகூக் 2:4; அப். 13:39; ரோமர் 1:17; எபி. 10:38

**17** **சங்கீதம் 25:14 - கர்த்தருடைய உடன்படிக்கை**
**தியானத்திற்கு:** எண். 10:33; உபா. 10:8; யோசுவா 3:17

**18** **உபாகமம் 4:29 - கர்த்தரைத் தேடும்போது கண்டடைவீர்கள்**
**தியானத்திற்கு:** ஏசாயா 55:6; எரேமியா 29:13; மத். 7:7,8

**19** **எரேமியா 31:33 - கர்த்தருடைய நியாயப்பிரமாணம்**
**தியானத்திற்கு:** நெகே. 8:18; எசே. 44:24; ரோமர் 7:22

**20** **2 தீமோத்தேயு 1:7 - தேவனுடைய அன்பின் ஆவி**
**தியானத்திற்கு:** ஓசியா 11:4; ரோமர் 5:5,8; 15:32; எபே. 2:4,5

**21** **யோவான் 14:26 - கர்த்தர் நமக்கு போதிக்கிறவர்**
**தியானத்திற்கு:** 1 இராஜா. 8:35,36; சங். 143:10; ஏசாயா 48:17

**22** **ஏசாயா 25:4 - நெருக்கப்படுகிறவனுக்கு திடன்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 30:6; எரே. 16:19; 2 கொரி. 4:8

**23** **ஏசாயா 3:10 - நீதிமானுக்கு நன்மை**
**தியானத்திற்கு:** சங். 58:11; நீதி. 13:21; எரே. 32:39-42

**24** **உன்னதப்பாட்டு 2:4 - நேசம்**
**தியானத்திற்கு:** நீதிமொழிகள் 15:9; உன்னதப்பாட்டு 1:2; 4:10

**25** **யாத்திராகமம் 16:4 - தேவன் நமக்கு ஆகாரம் தருகிறார்**
**தியானத்திற்கு:** ரூத் 1:6; சங். 111:5; 2 கொரி. 9:10

**26** **நீதிமொழிகள் 28:20 - பரிபூரண ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** உபா. 28:11; பிலி. 4:18,19; எபே. 3:19

**27** **எரேமியா 32:40 - கர்த்தர் உங்களுக்கு நன்மை செய்வார்**
**தியானத்திற்கு:** உபா. 26:11; நியா. 17:13; சங். 51:18; 119:68

**28** **சங்கீதம் 34:19 - கர்த்தர் நீதிமானை விடுவிப்பார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:18-20; நீதி. 11:21; எரே. 31:11

**29** **எண்ணாகமம் 21:34 - பயப்படாதிருங்கள்**
**தியானத்திற்கு:** ஆதி. 15:1; 26:24; யாத். 14:13; 1 நாளா. 28:20

**30** **நீதிமொழிகள் 23:18 - உங்கள் நம்பிக்கை வீண்போகாது**
**தியானத்திற்கு:** சங். 146:5; நீதி. 3:5,6; எரேமியா 17:7

**31** **அப்போஸ்தலர் 10:43 - கர்த்தரின் நாமத்தின்மீது விசுவாசம்**
**தியானத்திற்கு:** யோவான் 1:12; 2:23; 1 யோவான் 3:23; 5:13



இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்
www.jesuscalls.org/ta/dpv
Jesus Calls Tamil
JesusCalls
www.familychannel.org






Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest













**இந்தியாவில் 11.7 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் உள்ளனர். அவர்களுள் பெரும்பாலோனார், ஒரு பள்ளிப்பை கூட வாங்க முடியாமல் உள்ளனர். வறுமை, ஒரு குழந்தையின் திறனை பாதித்துவிடக்கூடாது என்பதில் சீஷா உறுதியாக உள்ளது. எங்கள் குழந்தைகள் மேம்பாட்டு திட்டங்கள் வாயிலாக, நலிவுற்ற குழந்தைகளுக்கு கற்றல் மையங்கள் வாயிலாக தனிப்பயிற்சியை இலவசமாக வழங்குகிறோம்.**

* மருத்துவ முகாம்கள் மற்றும் கோடை முகாம்கள்
* கல்வி ஊக்கத் தொகை, புத்தாடைகள், ஸ்கூல் கிட்கள் இன்னும் அநேகம்...* சீஷா ஸ்கூல் கிட் - கல்வியை மேம்படுத்துகிறது.

ஒவ்வொரு ஸ்கூல் கிட்டிலும் பள்ளிப் பை, உணவு பாத்திரம், மாணவரின் வகுப்பைப் பொறுத்து அத்தியாவசியமான நோட்டுப்புத்தகங்கள், எழுதுபொருட்கள் இருக்கும். நலிவுற்ற குடும்பத்தைச் சேர்ந்த சிறுபிள்ளைகளுக்காக வடிவமைப்பட்டுள்ள இந்த கிட்டுகள் பொருளாதார இக்கட்டின் மத்தியிலும் படிக்கின்ற ஆர்வத்துக்கு தூண்டியெழுப்பும்

ஒவ்வொரு மே மாதமும் ஏறக்குறைய 1,000 பிள்ளைகள், கோடை முகாம்களில், புதிய திறனை கற்றுக்கொள்கிறார்கள்; மறைந்திருக்கும் தாலந்துகளை கண்டுகொள்கிறார்கள்; சிறுபிராயத்தில் பாதுகாப்பான சூழ்நிலையை பெற்றிருக்கும் சந்தோஷத்தை அனுபவிக்கிறார்கள்.

## பாரமே இல்லாமல் கல்வி கற்றேன்



*என் தந்தை மறைந்த பிறகு, என் அம்மா அன்றாட செலவுகளையே சிரமத்துடன் சமாளித்தார்கள். ஒவ்வொரு கல்வியாண்டிலும் வேண்டியவற்றைக் குறித்த புதிய கவலைகள் உருவாகும். சீஷா, ஸ்கூல் கிட் எல்லா பாரத்தையும் அகற்றிவிட்டதால், படிப்பில் கவனம் செலுத்த முடிந்தது. இப்போது வகுப்பில் நானும் அதிக மதிப்பெண் பெறுகிறேன். அந்தப் பை, புத்தகங்களைவிட அதிகமான நம்பிக்கை அளித்தது.*

- **செல்வி. பவித்ரா**, 8ம் வகுப்பு, அடையாளம்பட்டு கற்றல் மையம்.

இந்த ஆண்டு, நலிவுற்ற பின்னணி கொண்ட 20,000 மாணவ மாணவியருக்கு ஸ்கூல் கிட் வெகுமதியளித்து, கல்வியாண்டை நம்பிக்கையுடன் ஆரம்பிக்க சீஷா தீர்மானித்துள்ளது.

இந்தப் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு பின்வருமாறு நீங்கள் உதவலாம்.

* 10 பிள்ளைகளுக்கான ஸ்கூல் கிட் வழங்க உதவுவதற்கு ரூ.5,000/-
* கோடை முகாம் ஒன்றை ஆதரிப்பதற்கு ரூ.7,500/- மையத்திற்கு

TAX EXEMPTED

UPI ID : 9384015155@okbizaxis

G Pay PhonePe Paytm UPI pay

OLA MONEY freecharge Mobikwik JioMoney

You can also donate through https://seesha.app

044 66660000
+91 9300 600 600

www.seesha.org
info@seesha.org

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045

DONATE TO SEESHA

* When you Donate send the Details to +91 9300 600 600



**சீஷா முதியோர் இல்லம்:** சீஷாவின் முதியோர் பராமரிப்பு இல்லம், கோயம்புத்தூர், காருண்யா நகரில் சிறுவாணி அருவி மலையடிவாரத்தில் அமைந்துள்ளது. முதியோருக்கு உதவி, சத்துள்ள உணவு, குறைந்த கட்டணத்தில் முதுமைக்கான பராமரிப்பு அளிக்கப்படுகிறது. ஒரு முதியவரும் மறக்கப்பட்டுவிட்டதாக உணராமல் இருப்பதற்கு உதவுங்கள். கீழ்க்காணும் விதங்களில் நீங்கள் ஆதரிக்கலாம்

* ஒரு முதியவருக்கான முழு பராமரிப்பு ரூ.15,000/- (மாதத்திற்கு)
* 4 முதியோருக்கான பராமரிப்பு ரூ.60,000/- (மாதத்திற்கு)



ஒரு முதியவரை ஆதரிக்க நீங்கள் வாக்குறுதி அளித்தால், Hold their hands, heal their hearts என்ற வாசகம் பொறிக்கப்பட்ட சீஷா கைப் பட்டை (wristband) ஒன்று அனுப்பி வைக்கப்படும். மேலும் அறிந்துகொள்வதற்கு +91-9500 127275 என்ற எண்ணை தொடர்புகொள்ளுங்கள்.

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418



# இயேசு அழைக்கிறார் பத்திரிகை

## விசுவாசத்தை ஊட்டும்; நடையை உறுதிப்படுத்தும்

இயேசு அழைக்கிறார் பத்திரிகை, லட்சக்கணக்கான வாசகருக்கு தேவனின் ஆசீர்வாதத்தை அளித்து வருகிறது. ஒவ்வொரு இதழும் Dr. பால் தினகரன் குடும்பத்தினரின் தெளிவான, வேதத்தை அடிப்படையாகக் கொண்ட போதனைகள், ஊழிய நடப்புகள், தனிப்பட்ட மற்றும் குடும்ப சவால்களுக்கு நடைமுறை தீர்வுகள், வல்லமையான சாட்சிகள், சிந்தனையை தூண்டும் வாலிபர் செய்திகள், வேத அடிப்படையிலான கதைகள் கொண்ட சிறுவர் பகுதி, பிள்ளைகள் தேவ வார்த்தையில் வளர உதவும் வசனங்களைக் கொண்டிருக்கும்.

---

### வாழ்க்கையை மாற்றிய ஒரே செய்தி

*தொடர்ந்து வந்த சோதனைகளோடு நான் போராடிக்கொண்டிருந்தேன். பெலனற்று, தோற்றதுபோல் உணர்ந்தேன். அவற்றை எப்படி மேற்கொள்வது என்பது தெரியாமல் தடுமாறினேன். அப்போது, இயேசு அழைக்கிறார் பத்திரிகையில் வாலிபர் பகுதியில் 'முற்றும் ஜெயங்கொண்டவர்கள்' என்ற செய்தியை வாசித்தேன். அது நேரடியாக என் சூழ்நிலையைப் பற்றி கூறியது. அது கொடுத்த வழிகாட்டுதல் என்னை பெலப்படுத்தியதோடு தினமும் நீதியை தொடரவும் உதவியது. வாழ்க்கையை மாற்றிய அந்த செய்திக்காக சகோதரர் சாமுவேலுக்கு நன்றி.*

*- காட்சன், சென்னை.*

தேசம் முழுவதும் 7 மொழிகளில் செல்லும் இப்பத்திரிகையை ஏறக்குறைய 1.5 லட்சம் பேர் வாசித்து ஆசீர்வாதம் பெறுகின்றனர். தொடர்ந்து தேவ சத்தியத்தைக் கொண்டு அநேகரை வழிநடத்தி வருகிறது.

வழிகாட்டுதலை, பெலனை, தேவனோடு நடப்பதில் தெளிவை நீங்கள் தேடினால் இப்பத்திரிகை உங்களுக்கு உதவும்.

**ஆண்டு சந்தா ரூ.500/-**

இணையத்தில் வாசிக்க: www.jesuscalls.org/magazine

QR CODEஐ ஸ்கேன் செய்யுங்கள்

---



DOWNLOAD

## இயேசு அழைக்கிறார் மொபைல் செயலி

இப்போது ஆண்ட்ராய்டு & iOS இரண்டிலும் கிடைக்கிறது.

**தேவனுடைய ஆசீர்வாதத்தை எப்போதும் எங்கும் அனுபவித்து மகிழுங்கள்.**

SCAN AND DOWNLOAD NOW

GET IT ON Google Play

Download on the App Store